ISSN: 2582–5518





# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM | VARALARUU | PUDUGAIVARALARU | VARALARUU | 7502051351





திங்கள் ❖ ஜனவரி 29, 2024 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 111 ❖ ரூ.10

இரண்டு ஆண்டுகளில் இரண்டாவது முறையாக முதல்வராக பதவியேற்றார்

# நிதிஷ் குமார்

## மகாகத்பந்தன் கூட்டணியில் இருந்து வெளியேறி நேற்று காலை முதல்வர் பதவியை ராஜினாமா செய்து, மாலையில் பாஜக ஆதரவுடன் 9-வது முறையாக பிஹார் முதல்வராக பதவி ஏற்றுக்கொண்டார்

**பாட்னா : ஜன. 29, மகாகத்பந்தன் கூட்டணியில் இருந்து வெளியேறி நேற்று காலை முதல்வர் பதவியை ராஜினாமா செய்த நிதிஷ் குமார், மாலையில் பாஜக ஆதரவுடன் 9-வது முறையாக பிஹார் முதல்வராக பதவி ஏற்றுக்கொண்டார். அவருக்கு ஆளுநர் ராஜேந்திர அர்லேகர் பதவி பிரமாணம் செய்து வைத்தார்.**

பிஹார் ஆளுநர் மாளிகையில் நடந்த பதவி ஏற்பு விழாவில் பாஜக தேசிய தலைவர் ஜெ.பி.நட்டா, ஜிதன் ராம் மஞ்சி, சிராக் பாஸ்வான் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். நிதிஷ் குமார் பதவி ஏற்ற போது பாஜக தொண்டர்கள் ஜெய் ஸ்ரீராம் என்றும் பாரத் மாதாகி ஜே என்றும் முழக்கமிட்டனர். நிதிஷ் குமாருடன் 8 பேர் அமைச்சர்களாக பதவியேற்றுக்கொண்டனர். இவர்களில் 3 பேர் பாஜகவையும், 3 பேர் ஐக்கிய ஜனதா தளத்தையும், ஒருவர் ஹிந்துஸ்தானி ஆவாம் மோர்ச்சா(மதச்சார்பின்மை) கட்சியையும் சேர்ந்தவர்கள். ஒருவர் சுயேட்சை எம்எல்ஏ. பாஜகவைச் சேர்ந்த சாம்ராட் சவுத்தரி, விஜய குமார் சின்ஹா, பிரேம் குமார், ஐக்கிய ஜனதா தளத்தைச் சேர்ந்த விஜய் குமார் சவுத்ரி, பிஜேந்திர பிரசாத் யாதவ், ஷ்ரவோன் குமார், ஹிந்துஸ்தானி ஆவோம் மோர்ச்சா(மதச்சார்பின்மை) கட்சியின் தலைவர் சந்தோஷ் குமார் சுமன், சுயேட்சை எம்எல்ஏ சுமித் குமார் சிங் ஆகியோர் அமைச்சர்களாக பதவியேற்றுக்கொண்டனர்.

முன்னதாக, பாட்னாவில் உள்ள ஆளுநர் மாளிகைக்கு நேற்று காலை சென்ற பிஹார் முதல்வர் நிதிஷ் குமார், ஆளுநர் ராஜேந்திர அர்லேகரைச் சந்தித்து ராஜினாமா கடிதத்தைக் கொடுத்தார். பின்னர் ஆளுநர் மாளிகைக்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசிய அவர், "பிஹார் முதல்வர் பதவியை இன்று நான் ராஜினாமா செய்துவிட்டேன். அமைச்சரவையை கலைக்கவும் ஆளுநரிடம் பரிந்துரைத்துள்ளேன். இண்டியா கூட்டணியில் விஷயங்கள் சரியாக நடக்கவில்லை. நான் காயப்படுத்தப்பட்டேன். எனவே, இண்டியா கூட்டணியை விட்டு நான் வெளியேறிவிட்டேன்" என தெரிவித்திருந்தார்.

இதனிடையே, பாஜக சட்டப்பேரவை உறுப்பினர்களின் ஆலோசனைக் கூட்டம் பாட்னாவில் நடைபெற்றது. இதில், கட்சியின் சட்டப்பேரவை குழு தலைவராக மாநில தலைவர் சாம்ராட் சவுத்ரி தேர்வு செய்யப்பட்டார். துணைத் தலைவராக விஜய் குமார் சின்ஹா தேர்வு செய்யப்பட்டார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சாம்ராட் சவுத்ரி, "என் வாழ்வில் வரலாற்றுத் தருணத்தை பாஜக ஏற்படுத்தி இருக்கிறது. கட்சியின் சட்டப்பேரவைத் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பதும், அரசில் பங்கு வகிக்க இருப்பதும் மிகுந்த உணர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.



கடந்த 2020ல் நடைபெற்ற பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பு என்பது மாநிலத்தின் வளர்ச்சிக்கானது. லாலு யாதவின் பயங்கரவாதத்துக்கு இன்று முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. பிஹாரில் காட்டாட்சி இருக்ககூடாது. அதற்கு முடிவு கட்ட வேண்டும் என முதல்வர் நிதிஷ் குமார் முன்மொழிந்ததை அடுத்து இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது" என கூறினார். இதனையடுத்துப் பேசிய கட்சியின் சட்டப்பேரவைக் குழு தலைவராக இருந்து தற்போது துணைத் தலைவராக மாறி இருக்கும் விஜய் குமார் சின்ஹா, கட்சியின் மூத்த தலைவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன் என்றார்.

இந்நிலையில், நேற்று மதியம் 1 மணி அளவில் மீண்டும் ஆளுநரை நிதிஷ் குமார் சந்தித்தார். அவருடன், சாம்ராட் சவுத்ரி, விஜய் குமார் சின்ஹா உள்ளிட்ட பாஜக தலைவர்கள், ஹிந்துஸ்தானி ஆவாம் மோர்ச்சா தலைவர்கள், ஒரு சுயேட்சை எம்எல்ஏ ஆகியோரும் சென்று ஆளுநரைச் சந்தித்தனர். அப்போது, பாஜக எம்எல்ஏக்கள் உள்ளிட்ட ஆதரவு எம்எல்ஏக்களின் கையொப்பம் அடங்கிய மனுவை ஆளுநரிடம் அளித்து, தனக்கு பெரும்பான்மை இருப்பதால் ஆட்சி அமைக்க அழைப்பு விடுக்குமாறு உரிமை கோரியிருந்தார்.

கடந்த 2020-ம் ஆண்டு பிஹாரில் நடந்த சட்டபேரவைதேர்தலில் பாஜக, ஐக்கிய ஜனதா தளம் ஆகிய கட்சிகள் அடங்கிய தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெற்று நிதிஷ் குமார் முதல்வரானார். அதன் பிறகு பாஜகவுடன் அதிருப்தி ஏற்பட்டதால், 2022-ல் தேசிய ஜனநாயக கூட்டணியிலிருந்து விலகினார். ராஷ்ட்ரிய ஜனதா தளம், காங்கிரஸ் ஆகிய கட்சிகள் அடங்கிய மெகா கூட்டணியில் இணைந்து பிஹாரில் புதிய ஆட்சியை அமைத்தார். தற்போது மெகா கூட்டணியில் இருந்து விலகி, பாஜகவுடன் இணைந்து முதல்வராகி உள்ளார். இரண்டு ஆண்டுகளில் நிதிஷ் குமார் இரண்டாவது முறையாக முதல்வர் பதவி ஏற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

# "நீதியை எளிதாக பெறுவது குடிமக்களின் உரிமை"

## உச்சநீதிமன்ற வைர விழாவில் பிரதமர் மோடி பேச்சு



**புதுடெல்லி : ஜன. 29, நீதியை எளிதாகப் பெருவது என்பது ஒவ்வொரு குடிமக்களின் உரிமை என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். உச்சநீதிமன்ற வைர விழா கொண்டாட்டத்தின் தொடக்க விழாவில் பிரதமர் இதனைத் தெரிவித்தார்.**

டெல்லியில் உள்ள உச்சநீதிமன்ற கலையரங்கில் உச்சநீதிமன்றத்தின் வைர விழா கொண்டாட்டங்களை பிரதமர் நரேந்திர மோடி நேற்று தொடங்கி வைத்தார். டிஜிட்டல் உச்ச நீதிமன்ற அறிக்கைகள் (டிஜிஎஸ்சிஆர்), டிஜிட்டல் நீதிமன்றங்கள் 2.0 மற்றும் உச்ச நீதிமன்றத்தின் புதிய வலைத்தளம் உள்ளிட்ட குடிமக்களை மையமாகக் கொண்ட தகவல் மற்றும் தொழில்நுட்ப முயற்சிகளையும் பிரதமர் தொடங்கி வைத்தார். கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் கூறியதாவது: இரண்டு நாட்களுக்கு முன்பு இந்திய அரசியலமைப்பு அதன் 75-வது ஆண்டில் அடியெடுத்து வைத்ததது. உச்சநீதிமன்றம் இன்று (ஜன. 28) அதன் 75-வது ஆண்டைத் தொடங்கும் போது வருகை தந்த உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுதந்திரம், சமத்துவம், நீதி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட சுதந்திர இந்தியா என்ற கனவை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள் கண்டனர். இந்தக் கோட்பாடுகளைப் பாதுகாக்க உச்சநீதிமன்றம் தொடர்ந்து முயற்சி செய்து வருகிறது. கருத்து சுதந்திரம், தனிநபர் சுதந்திரம் அல்லது சமூக நீதி என எதுவாக இருந்தாலும், உச்சநீதிமன்றம் இந்தியாவின் துடிப்பான ஜனநாயகத்தை வலுப்படுத்தியுள்ளது. தனிநபர் உரிமைகள் மற்றும் பேச்சு சுதந்திரம் குறித்த மைல்கல் தீர்ப்புகள் நாட்டின் சமூக - அரசியல் சூழலுக்கு ஒரு புதிய திசையை அளித்துள்ளன.

இன்றைய பொருளாதாரக் கொள்கைகள் நாளைய துடிப்பான இந்தியாவுக்கு அடிப்படையாக அமையும். இன்று வகுக்கப்படும் சட்டங்கள் இந்தியாவின் பிரகாசமான எதிர்காலத்தை வலுப்படுத்தும். உலகளாவிய புவிசார் அரசியலில் மாறி வரும் நிலப்பரப்புக்கு இடையே, உலகின் கண்கள் இந்தியாவின் மீது இருக்கிறது. அதன் நம்பிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதனால் நமக்குக் கிடைக்கும் அனைத்து வாய்ப்புகளையும் நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியம். வாழ்க்கையை எளிதாக்குதல், எளிதாக வர்த்தகம் செய்தல், பயணம், தகவல் தொடர்பு மற்றும் நீதியை எளிதாக்குதல் ஆகியவை நாட்டிற்கான முன்னுரிமைகள். நீதியை எளிதாகப் பெறுவது ஒவ்வொரு இந்திய குடிமகனின் உரிமை மற்றும் அதன் ஊடகமான இந்திய உச்ச நீதிமன்றத்தின் உரிமை.

நாட்டின் ஒட்டுமொத்த நீதி அமைப்பும் இந்திய உச்சநீதிமன்றத்தால் நிர்வகிக்கப்பட்டு வழிநடத்தப்படுகிறது. மின்னணு நீதிமன்ற இயக்கத் திட்டத்தின் மூன்றாம் கட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மூன்றாம் கட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு இரண்டாம் கட்டத்தை விட நான்கு மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. நாட்டில் உள்ள அனைத்து நீதிமன்றங்களின் டிஜிட்டல் மயமாக்கலை இந்திய தலைமை நீதிபதியே கண்காணித்து வருவது மகிழ்ச்சி அளிக்கிறது. அவரது முயற்சிகளுக்கு என்னுடைய வாழ்த்துகள். நீதிமன்றங்களின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் அரசு உறுதி பூண்டிருக்கிறது. இதற்காக 2014-ம் ஆண்டுக்குப் பிறகு 7,000 கோடி ரூபாய்க்கு மேல் ஏற்கனவே விநியோகிக்கப்பட்டுள்ளது. உச்ச நீதிமன்ற கட்டிட வளாகத்தின் விரிவாக்கத்திற்கு ரூ. 800 கோடிக்கு கடந்த வாரம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இன்று தொடங்கப்பட்ட உச்ச நீதிமன்றத்தின் டிஜிட்டல் முன் முயற்சிகள் மூலம் உச்சநீதிமன்றத்தின் முடிவுகள் டிஜிட்டல் வடிவத்தில் கிடைப்பது குறித்தும், உச்ச நீதிமன்றத் தீர்ப்பை உள்ளூர் மொழியில் மொழிபெயர்க்கும் திட்டம் தொடங்கப்பட்டிருப்பது குறித்தும் மகிழ்ச்சி கொள்கிறேன். நாட்டின் மற்ற நீதிமன்றங்களிலும் இதேபோன்ற ஏற்பாடுகள் செய்யப்படும் என்று நான் நம்புகிறேன்.

எளிதான நீதிக்கு தொழில் நுட்பம் உதவிகரமாக இருப்பதற்கு இந்த நிகழ்ச்சி சரியான உதாரணம். செயற்கை நுண்ணறிவு உதவியுடன் நிகழ் நேரத்தில் எனது உரை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படுகிறது. அதை பாஷினி செயலி மூலமாகவும் கேட்க முடிகிறது. ஆரம்பத்தில் சில பிரச்சினைகள் எழுந்தாலும், இது தொழில்நுட்ப பயன்பாட்டின் எல்லைகளை விரிவுபடுத்துகிறது. நமது நீதிமன்றங்களிலும் கூட, சாமானிய மக்களின் வாழ்க்கையை எளிதாக்குவதற்கு இதுபோன்ற தொழில்நுட்பத்தை செயல்படுத்த முடியும். மக்களின் சிறந்த புரிதலுக்காக எளிமையான மொழியில் சட்டங்களை உருவாக்க வேண்டும் என்று நான் ஏற்கனவே கருத்து தெரிவித்திருந்தேன். நீதிமன்ற தீர்ப்புகள் மற்றும் உத்தரவுகளை உருவாக்குவதில் இதே போன்ற அணுகுமுறையை நாம் பின்பற்ற வேண்டும்.

நமது சட்டங்கள் இந்திய நெறிமுறைகள் மற்றும் சமகால நடைமுறைகள் இரண்டையும் பிரதிபலிக்க வேண்டியது அவசியம். இந்திய விழுமியங்களும், நவீனத்துவமும் நமது சட்ட விதிகளில் சமமாக இருப்பது இன்றியமையாதது. தற்போதைய சூழ்நிலை மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ப சட்டங்களை நவீனமயமாக்குவதில் அரசாங்கம் தீவிரமாக செயல்பட்டு வருகிறது.

காலாவதியான காலனித்துவ குற்றவியல் சட்டங்களை ஒழிப்பது, பாரதிய நாக்ரிக் சுரக்ஷா சம்ஹிதா, பாரதிய நியாய சம்ஹிதா, பாரதிய சாக்ஷயா அதினியம் போன்ற புதிய சட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த மாற்றங்கள் மூலம், நமது சட்டம், காவல்துறை மற்றும் விசாரணை அமைப்புகள் ஒரு புதிய சகாப்தத்தில் நுழைந்துள்ளன. பழைய சட்டங்களிலிருந்து புதிய சட்டங்களுக்கு மாறுவது தடையற்றதாக இருக்க வேண்டும், இது கட்டாயமாகும். இது தொடர்பாக, மாற்றத்தை எளிதாக்குவதற்காக அரசு அதிகாரிகளுக்கு பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டு முயற்சிகள் தொடங்கப்பட்டுள்ளன.

வளர்ச்சியடைந்த பாரதத்தின் அடித்தளமாக வலுவான நீதி அமைப்பு முக்கியப் பங்கு வகிக்கிறது. நம்பகமான சட்டக் கட்டமைப்பை உருவாக்குவதற்காக அரசு தொடர்ந்து முயற்சிக்கிறது. ஜன் விஸ்வாஸ் மசோதா இயற்றப்பட்டது அதன் சரியான திசையின் ஒரு படி, இது நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கையையும் குறைத்து, நீதித்துறையின் தேவையற்ற அழுத்தத்தை தணிக்கும். சமரசம் மூலம் மாற்றுத் தீர்வுக்கான ஏற்பாடுகள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. இது குறிப்பாக கீழமை நீதிமன்றங்களில் சுமையைக் குறைப்பதற்கு பங்களித்துள்ளது. 2047-க்குள் வளர்ந்த இந்தியாவாக மாற வேண்டும் என்ற இந்தியாவின் கனவை நனவாக்குவதில் அனைத்து குடிமக்களுக்கும் கூட்டு பொறுப்பு உள்ளது. அடுத்த 25 ஆண்டுகளில் நாட்டின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் உச்சநீதிமன்றம் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கும்." என்று பிரதமர் பேசினார்.

தனது உரையில் பாத்திமா பீவிக்கு மரணத்திற்குப் பின் பத்ம பூஷண் விருது வழங்கப்பட்டதை குறிப்பிட்ட பிரதமர், இந்த வாய்ப்பு குறித்து பெருமிதம் தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டாக்டர் டி.ஒய். சந்திரசூட், மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால், உச்ச நீதிமன்ற நீதிபதிகள் சஞ்சீவ் கண்ணா, நீதிபதி பூஷண் ராமகிருஷ்ண கவாய், இந்திய அட்டர்னி ஜெனரல் ஆர் வெங்கடரமணி, உச்ச நீதிமன்ற பார் அசோசியேஷன் தலைவர் டாக்டர் ஆதிஷ் சி அகர்வால் மற்றும் இந்திய பார் கவுன்சில் தலைவர் மனன் குமார் மிஸ்ரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# "சட்டத்தை விட மேலானவர்கள் யாரும் இல்லை"

## கேரள ஆளுநர் மீது முதல்வர் பினராயி விஜயன் சாடல்

**திருவனந்தபுரம் : ஜன. 29, கேரளா மாநிலம் கொல்லத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை சாலையில் அமர்ந்து தர்ணாவில் ஈடுபட்ட அம்மாநில ஆளுநர் ஆரிப் கானை கடுமையாக விமர்சித்துள்ள முதல்வர் பினராயி விஜயன், "சட்டத்தைவிட மேலானவர்கள் யாரும் இல்லை" என்று சாடியுள்ளார்.**

கேரள மாநில ஆளுநர் ஆரிப் முகமது கான் நேற்று முன்தினம் சனிக்கிழமை நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்பதற்காக கொல்லம் சென்று கொண்டிருந்தார். அப்போது அவரது வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சிபிஎம் கட்சியின் மாணவர் பிரிவான எஸ்எஃப்ஐ அமைப்பினர் கருப்புக்கொடி காட்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆளுநருக்கு எதிராக முழக்கங்களையும் எழுப்பினர்.

இதனைத் தொடர்ந்து ஆளுநர் ஆரிப் முகமது கான் உடனடியாக தனது கான்வாய் வாகனங்களை நிறுத்தச் சொல்லி காரில் இருந்து



இறங்கி, போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கைதுசெய்யச் சொல்லி காவலர்களுக்கு உத்தரவிட்டார். தொடர்ந்து அங்கிருந்த டீ கடை ஒன்றில் இருந்த நாற்காலியை கொண்டு வந்து, சாலையில் அமர்ந்து தர்ணாவில் ஈடுபட்டார்.

ஆளுநரின் இந்தச் செயலை அம்மாநில முதல்வர் பினராயி விஜயன் கடுமையாக விமர்சித்துள்ளார். அவர் கூறுகையில்,"கேரளாவில் சிஆர்பிஎஃப் நேரடியாக ஆட்சி செய்திடுமா? அவர்களால் ஒரு வழக்கினை பதிவு செய்திட முடியுமா? மாநிலத்துக்கு சிஆர்பிஎஃப் வீரர்களை அனுப்புவது விசித்திரமாக இருக்கிறது. காவல்துறையினர் அவர் விரும்பிய வகையில் செயல்படவில்லை என்று ஆளுநர் புகார் கூறியுள்ளார். சிஆர்பிஎஃப் போலீஸார் அவர் விருப்பப்படி நடந்து கொள்வார்களா? சட்டத்தைவிட மேலானவர்கள் யாரும் இல்லை.

அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு எதிராக இம்மாதிரியான போராட்டங்கள் நடக்கும், அதற்கு எதிர்வினையாற்றும் போது ஒரு வரைமுறையைக் கடைபிடிக்க வேண்டும். முதல்வருக்கு எதிரான போராட்டங்கள் எவ்வாறு கையாளப்படுகின்றன என்று ஆளுநர் கேட்டுள்ளார். நான் பல பயணங்களை மேற்கொண்டுள்ளேன். அதற்கு முன்பாக நான் பயணிப்பதற்கு அந்தப் பாதை பாதுகாப்பாக இருக்கிறதா என்று உறுதி செய்து கொள்வேன்.

அவர் நடந்து கொண்டது பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு எதிரானது இல்லையா? ஒரு போராட்டம் நடக்கும் போது பயணிக்க அந்தப்பாதை பாதுகாப்பானதுதானா என்பதை போலீஸார் உறுதிசெய்வார்கள் என்பது ஆளுநருக்கு தெரியும். போராட்டக்காரர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை தெரிந்து கொள்ள யாராவது தங்களின் வாகனத்தை விட்டு இறங்குவதை எப்போதாவது கேள்விப்பட்டிருக்கிறோமா?

கோழிக்கோட்டில் போலீஸார் தன்னுடன் வரவேண்டாம் என்று அவர் கூறினார். மாநிலத்தின் தலைவர் அவர், மிகவும் பாதுகாக்கப்பட்ட நபர், இதனை அவர் வேண்டாம் என்று கூறுகிறாரா? முன்பு ஒருமுறை கேரள போலீஸார் தான் சிறந்தவர்கள் என்று ஆளுநர் கூறினார். அவர்கள் அவருக்கு போதாதா? கேரளாவிலோ, இந்தியாவிலோ உயர்பதவியில் இருக்கும் ஒருவர் இவ்வாறு நடந்து பார்த்துண்டா?

சட்டமன்றத்தில் கொள்கை விளக்க உரையின் கடைசி பத்தியை மட்டும் வாசிக்க வேண்டும் என்ற ஆளுநரின் முடிவு அரசியல் சாசனத்தை அவமதிக்கும் செயல். கொள்கை விளக்க உரையை வாசிக்க ஆளுநருக்கு நேரமில்லை ஆனால், சாலையில் அமர்ந்து 1.30 மணிநேரம் போராட்டம் நடத்த அவருக்கு நேரம் இருக்கிறது" என்று முதல்வர் விமர்சித்துள்ளார்.

# "கொள்ளை அடித்த பணத்தை முதலீடு செய்ய முதல்வர் ஸ்டாலின் வெளிநாடு பயணம்" – இபிஎஸ் குற்றச்சாட்டு

**தஞ்சாவூர் : ஜன. 29, கொள்ளை அடித்த பணத்தை முதலீடு செய்வதற்காக முதல்வர் ஸ்டாலின் வெளிநாடு சென்றிருக்கிறார் என்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி குற்றம்சாட்டியுள்ளார்.**

தஞ்சையில் பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காக வந்த அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு ஒரத்தநாடு பகுதியில் அக்கட்சியின் தொண்டர்கள் உற்சாகவரவேற்பு அளித்தனர். பின்னர், தொண்டர்கள் மத்தியில், அவர் பேசியது: "ஒரத்தநாடு என்றாலே, துரோகி இருக்கிற இடம் என்பதுதான் நினைவுக்கு வரும். அந்த துரோகியை வெல்வதற்காகத்தான் இவ்வளவு பெரிய கூட்டம் இங்கே கூடியிருக்கிறீர்கள். அதிமுக தலைமைக் கழகம் 2 கோடி தொண்டர்களுக்கு சொந்தமான சொத்து. நாம் எப்படி கோயிலுக்குச் சென்று தெய்வங்களை வழிபடுகிறோமோ, அதுபோல், அதிமுகவினருக்கு கோயிலாக இருப்பதுதான், சென்னையில் இருக்கும் அதிமுக கட்சி அலுவலகம். அதை அடித்து



நொறுக்கலாமா? அது என்ன செய்தது? நமக்குள் எத்தனையோ கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் தலைமைக்கழகத்தை கோயிலாக வணங்கக்கூடிய தொண்டன் என்ன செய்தான்? நாம் வணங்கும் கோயிலை அடித்து நொறுக்கலாமா? இது மன்னிக்கக்கூடிய குற்றமா?" என்று பேசினார்.

முன்னதாக, வல்லம் பகுதியில் தொண்டர்கள் மத்தியில் பேசிய அவர், "தமிழக முதல்வரின் மகனும், மருமகனும் ரூ.30,000 கோடி பணத்தை ஊழல் செய்துள்ளனர். அந்தப் பணத்தை என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்துக் கொண்டிருக்கின்றனர். இரண்டு ஆண்டுகால திமுக ஆட்சியில், கொள்ளையடிப்பது ஒன்றுதான் குறிக்கோளாக இருந்துள்ளது. இவ்வாறு கொள்ளை அடித்த பணத்தை முதலீடு செய்வதற்காக வெளிநாடு சென்றிருக்கிறார் தமிழக முதல்வர் ஸ்டாலின்" என்று பேசினார்.

முன்னதாக செங்கிப்பட்டியில் கட்சி நிர்வாகிகளிடையே எடப்பாடி பழனிசாமி பேசியதாவது: "விடியா திமுக அரசு பொறுப்பேற்று இரண்டு வருடம் 8 மாத காலமாகிறது. விவசாயிகளுக்கு என்ன செய்தார்கள் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

விவசாயிகளுக்கு நீர் பெற்றுத் தர எம்ஜிஆர் காலத்திலிருந்து, ஜெயலலிதா காலம் வரை சட்டப்போராட்டம் நடத்தி அதிமுக ஆட்சியில் தீர்வு காணப்பட்டது. உச்சநீதிமன்றத்தில் விவசாயிகளுக்கு நீதியை பெற்றுத் தந்ததன் மூலம், விவசாயிகளுக்கு அவர்களுடைய உரிமையை பெற்றுத் தந்தது அதிமுக அரசு. விவசாயிகளின் விளைநிலங்களை பாதுகாக்கும் வகையில் டெல்டா மாவட்டங்களில் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்தை பெற்றுத் தந்தது அதிமுக அரசு.

வரும் நாடாளுமன்ற தேர்தலில் விடியா திமுக அரசுக்கும், திமுக ஆட்சிக்கும், திராவிட மாடல் ஆட்சிக்கும், திமுகவுக்கும் ஒரு முடிவுகட்டும் தேர்தலாக இந்த தேர்தல் அமைய வேண்டும். மக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்த விடியா திமுக அரசு, திமுக கட்சிக்கு இந்தத் தேர்தல் மூலமாக ஒரு சம்மட்டி அடியை நீங்கள் கொடுக்க வேண்டும். மக்களை ஏமாற்றினால் இப்படிப்பட்ட நிலைமைதான் வரும் என்பதை அந்தக் கட்சிக்கு உணர்த்துகின்ற தேர்தலாக இந்த நாடாளுமன்ற தேர்தல் அமைய வேண்டும்" என்றார்.

# இன்று

# 29-1-24



சங்கடஹர சதுர்த்தி

திருவெள்ளியங்குடி திருத்தலம் : வாகன பாதுகாப்பும், வழித்துணையும் வரும் பெருமான்.

சக வருடம் 1945 மாகம் 09

| | | | |
|---|---|---|---|
| சோபகிருது தை 15 | JAN - MON திங்கள் | ரஜப் 17 தேய்பிறை 029 / 337 | இராசிபலன் |

தேய். சதுர்த்தி 60.00 (முழுவதும்) பூரம் 29.43 (மா. 06.29) தியாஜ் 49.28 சித்த. திரிதினஸ்பிரிக். **சங்கடஹர சதுர்த்தி.** திருத்தணி ஸ்ரீமுருகப் பெருமானுக்கு பால் அபிஷேகம். திருமயம் ஸ்ரீஆண்டாள் புறப்பாடு. இன்று ஸ்ரீவிநாயகப் பெருமானை வழிபட நன்று.

| நல்லநேரம் | கௌ.ந.நெ. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|
| காலை: 6.30-7.30 | 9.30-10.30 | 07.30 | 01.30 | 10.30 |
| மாலை: 4.30-5.30 | 7.30-8.30 | 09.00 | 03.00 | 12.00 |

சூலம் : கிழக்கு; பரிகாரம் : தயிர்; மகர லக்கனம் இருப்பு நா. 2 வி. 43; சந்திராஷ்டமம் உத்திராடம் திருவோணம்

கரணம்: 9-10.30; சூரிய உதயம் : 6.36

ரா, வி, சனி, 5 தனு-சுக், 13 மகர-புத, 21 மகர-செ, சூ, பு, சு, செ, கே, கீழ் ↓, திதி சதுர்த்தி

ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு

| இராசிபலன் | |
|---|---|
| மேஷம் | நன்மை |
| ரிஷபம் | நலம் |
| மிதுனம் | கவனம் |
| கடகம் | கஷ்டம் |
| சிம்மம் | பரிவு |
| கன்னி | உயர்வு |
| துலாம் | பரிசு |
| விருச்சி | செலவு |
| தனுசு | ஆரோக்கியம் |
| மகரம் | வெற்றி |
| கும்பம் | லாபம் |
| மீனம் | நற்செய்தி |

## சிந்திப்போம்.... செயல்படுவோம்

**உங்களின் தோல்வி எங்கே ஒளிந்துள்ளது தெரியுமா? பிரச்சனைகள் வரும்போது அல்ல; பிரச்சனைகளைக் கண்டு நீங்கள் பயந்து விலகும்போது.**






# அரியலூர் அருகே கடுகூர் கிராம சபை கூட்டத்தில் பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்

**அரியலூர் : ஜன. 29,**

**அரியலூர் அருகே ஆத்தூர் கிராமத்தில் அடிப்படை வசதிகள் செய்யப்படவில்லை என்று கிராம சபை கூட்டத்தில் பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.**



அரியலூர் அருகே, கடுகூர் சேவை மன்ற கட்டத்தில் குடியரசு தின கிராம சபை கூட்டம் ஊராட்சி மன்ற தலைவர் தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்றது. அப்போது கூட்டத்துக்கு வந்த கடுகூர் ஊராட்சிக்குட்பட்ட, அயன் ஆத்தூர் கிராமத்தைச் சேர்ந்த ஆசைத்தம்பி உள்ளிட்டோர், கடுகூர் கிராமத்தில் மின் விளக்கு, குடிநீர் வசதி உள்ளிட்ட அடிப்படை பணிகள் கூட செயல்படுத்தப்படவில்லை. தொகுப்பு வீடுகள் கூட கடந்த நான்கு ஆண்டுகளாக அயன் ஆத்தூர் கிராமத்துக்கு வழங்காமல், ஊராட்சி தலைவர் தர்மலிங்கம் பாரபட்சமாக செயல்படுகிறார். இதற்கு உரிய நீதி வேண்டும். அதுவரை கிராமசபை கூட்டத்தை நடத்தவிட மாட்டோம் எனக் கூறி, ஊராட்சி மன்ற தலைவர் தர்மலிங்கத்திற்கு எதிராக, ஆத்தூர் கிராமத்தை சேர்ந்த ஆசை தம்பி உள்ளிட்டோர், முற்றுகை போராட்டம் நடத்தினர்.

அரியலூர் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சகாயராஜ், அயன் ஆத்தூர் கிராம மக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி, உரிய நீதி கிடைக்க நடவடிக்கை மேற்கொள்வதாக உறுதி கூறினார். இதையடுத்து அங்கு வந்த அயன் ஆத்தூர் கிராமத்தை சேர்ந்த ஆசைத்தம்பி உள்ளிட்டோர், கூட்ட மன்றத்தை விட்டு வெளியேறினர். அதைத்தொடர்ந்து போலீஸ் பாதுகாப்புடன் கடுகூர் கிராம சபை கூட்டம் நடைபெற்றது.

# அரியலூர் பகுதியில் குடியரசு தின கிராம சபை கூட்டங்கள்

**அரியலூர் : ஜன. 29,**

**அரியலூர் பகுதியில், குடியரசு கிராம சபை கூட்டங்கள் நடைபெற்றன.**



அரியலூர் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட, கல்லங்குறிச்சி ஊராட்சி மன்ற அலுவலகத்தில், ஊராட்சி மன்ற தலைவர் ஆர்த்தி சிவகுமார் தலைமையில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது. ஊராட்சி செயலாளர் தனபால் தீர்மானங்களை படித்தார்.

மணக்குடி ஊராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்துக்கு, அதன் தலைவர் சங்கீதா அசோக்குமார் தலைமை வகித்தார். ஊராட்சி செயலாளர் தேசிங்கு ராஜா தீர்மானங்களை படித்தார். சென்னிவனம் ஊராட்சி சேவை மைய கட்டிடத்தில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்துக்கு, அதன் தலைவர் கிருஷ்ணமூர்த்தி தலைமை வகித்தார். ஊராட்சி செயலாளர் முருகேசன் தீர்மானங்களை படித்தார்.

ராயம்புரம் கிராமத்தில் உள்ள சேவை மையக் கட்டிடத்தில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில், ஊராட்சி செயலாளர் பார்வதி தீர்மானங்களை படித்தார். ஊராட்சி மன்ற துணைத் தலைவர் வீராசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ஒட்டகோவில் கிராமத்தில் உள்ள ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்திற்கு, அதன் தலைவர் செங்கமலை தலைமை வகித்தார். ஊராட்சி செயலாளர் சத்தியசீலன் தீர்மானங்களை படித்தார்.

தாமரைக் குளம் ஊராட்சி மன்ற அலுவலகத்தில், அதன் தலைவர் பிரேம்குமார் தலைமையில், குடியரசு தின கிராம சபை கூட்டம் நடைபெற்றது. ஊராட்சி செயலாளர் முத்து தீர்மானங்களை படித்தார்.

எருத்துக்காரன்பட்டி ஊராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்துக்கு, அதன் தலைவர் சிவா என்கிற பரமசிவம் தலைமை வகித்தார். அலுவலக நிர்வாகி பரமேஸ்வரி தீர்மானங்களை படித்தார். கிராம நிர்வாக அலுவலர் சிவசக்தி கமலக்கண்ணன் மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வாலாஜா நகரம் ஊராட்சி மன்ற நடுநிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்துக்கு, அதன் தலைவர் அபிநயா இளையராஜா தலைமை வகித்தார். ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் குணசேகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ஊராட்சி செயலாளர் தமிழ் குமரன் தீர்மானங்களை படித்தார்.

**மின்தடை :** வருகின்ற 30.01.2024 அன்று 110/33-11 கி.வோ. புனல்குளம் தொகுப்பு துணைமின் நிலையத்தில் மாதாந்திர பராமரிப்பு பணிகள் நடைபெறுவதால் இந்த துணை மின் நிலையத்திலிருந்து மின் விநியோகம் பெறும் புனல்குளம், தெத்துவாசல்பட்டி, மஞ்சப்பேட்டை, தச்சங்குறிச்சி, விராலிப்பட்டி, நத்தமாடிப்பட்டி, சோழகம்பட்டி, நொடியூர், சமுத்திரப்பட்டி, கொத்தம்பட்டி, அரியாணிப்பட்டி, காடவராயன்பட்டி, புதுநகர், முதுகுளம் ஆகிய பகுதிகளுக்கும் மற்றும் 33/11 கி.வோ. குளத்தூர் நாயக்கர்பட்டி துணைமின் நிலையத்திலிருந்து மின் விநியோகம் பெறும் குளத்தூர் நாயக்கர்பட்டி, நடுப்பட்டி, சேவியர் குடிகாடு, ஆத்தங்கரைப்பட்டி, கீராத்தூர், பருக்கைவிடுதி, குளத்தூர், மூக்கப்புடையான்பள்ளம் ஆகிய பகுதிகளுக்கும் காலை 09:00 மணி முதல் மாலை 04:00 மணி வரை மின் விநியோகம் இருக்காது என உதவி செயற்பொறியாளர்/பராமரிப்பு/ புனல்குளம் வில்சன் அறிவிக்கின்றார்.



▶ தென்காசி மாவட்டம்கன்னியாகுமரியில் நடக்க இருக்கும் 17-வது தேசிய அளவிலான தரைப்பந்து போட்டியில் தமிழக அணிக்காக 19 வயதுக்குட்பட்டோருக்கான ஜூனியர் பெண்கள் தரைப்பந்து அணியில் கடையநல்லூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் வீராங்கனைகள் இளங்கலை கணினி அறிவியல் துறை இரண்டாம் ஆண்டு மாணவி உதய லட்சுமி, பொன் பிரதீபா மற்றும் வணிகவியல் துறை முதலாம் ஆண்டு மாணவி நித்யா ஆகியோர் தமிழக அணிக்காக தேர்வு செய்யப்பட்டு தேசிய போட்டியில் விளையாட உள்ளனர். தேர்வு செய்யப்பட்ட வீராங்கனைகளை கல்லூரி முதல்வர் முனைவர் பா. விக்டோரியா தங்கம் கன்னி, அறிவியல் துறை தலைவர் முனைவர் முருகன், வணிகவியல் துறை தலைவர் முனைவர் சண்முக வடிவு மற்றும் உடற் கல்வி இயக்குனர் முனைவர் குரு சித்ர சண்முகம் பாரதி ஆகியோர் வீராங்கனைகளை பாராட்டினர்.

# தென்காசியில் மதிமுக சார்பில் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்

**தென்காசி : ஜன. 29,**

**தென்காசி மாவட்ட மதிமுக சார்பில் தென்காசியில் மொழிப்போர் தியாகிகள் வீர வணக்க நாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது.**



தென்காசி புதிய பேருந்து நிலையம் முன்பு நடைபெற்ற வீர வணக்க நாள் பொதுக்கூட்டத்திற்கு தென்காசி தெற்கு மாவட்ட மதிமுக செயலாளர் ராம உதயசூரியன் தலைமை வகித்தார். வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் சதன் திருமலைக்குமார், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் சுதா. இல. பாலசுப்பிரமணியன், தென்காசி வடக்கு மாவட்ட அவைத் தலைவர் செல்வ சக்தி வடிவேல், மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் பாலகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தென்காசி தெற்கு மாவட்ட மதிமுக அவைத் தலைவர் வெங்கடேஸ்வரன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். மாவட்ட துணைச் செயலாளர் சுரண்டை எஸ்கேடி. துரைமுருகன், தென்காசி கிழக்கு ஒன்றிய மதிமுக செயலாளர் மாரி செல்வம் ஆகியோர் இந்நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கினர்.

இக்கூட்டத்தில் மதிமுக மாநில துணை பொதுச் செயலாளர் வழக்கறிஞர் திமு. ராஜேந்திரன், மதிமுக மாநில இலக்கிய அணி செயலாளர் காரை செல்வராஜ் ஆகியோர் கலந்து கொண்டு மொழிப்போர் தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்தும் வகையில் சிறப்புரை ஆற்றினார்கள். மதிமுக தலைமை தணிக்கை குழு உறுப்பினர் சுரண்டை ராம கிருஷ்ணன், மாநில மருத்துவர் அணி செயலாளர் சுப்பாராஜ், மாநில சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் காசிராஜன், குருவிகுளம் ஒன்றிய குழு பெருந்தலைவர் விஜயலெட்சுமி, மாவட்ட கவுன்சிலர் தேவி ராஜ கோபால், மாநில தீர்மான குழு உறுப்பினர் சுந்தரராஜன், மதிமுக தலைமை செயற்குழு உறுப்பினர்கள் வேதநாயகம், விவேகானந்தன், காளிராஜ், மாநில விவசாய அணி துணை செயலாளர் மோகன்தாஸ், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் இசக்கியப்பன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் துரை மோகன்ராஜ் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர். முடிவில் தென்காசி நகர செயலாளர் கார்த்திக் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# "பெற்றோர்கள் குழந்தைகளைப் பாராட்டுங்கள்" ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக். மேல்நிலைப்பள்ளி ஆண்டு விழாவில் தேசிய விருதுபெற்ற திரைப்பட நடிகர் தம்பி ராமையா பேச்சு

**புதுக்கோட்டை : ஜன. 29,**

**புதுக்கோட்டை திருக்கோகர்ணம் ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக். மேல்நிலைப் பள்ளியில் ஆண்டுவிழா நடைபெற்றது. அழகப்பா பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் டாக்டர் சுப்பையா தலைமை ஏற்க சிறப்பு விருந்தினராக தேசிய விருதுபெற்ற திடைப்பட நடிகர் தம்பி ராமையா கலந்துகொண்டார்.**




"ஆசிரியர் மனசு" திட்ட ஒருங்கிணைப்பாளர் சிகரம் சதீஷ்குமார், விஜய் குழுமத் தலைவர் முருகானந்தம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பள்ளியின் முதல்வர் கவிஞர் தங்கம் மூர்த்தி முன்னிலையில் "விங்ஸ்" எனும் ஆண்டு மலரை சிறப்பு விருந்தினர் தம்பி ராமையா வெளியிட அழகப்பா பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் பெற்றுக் கொண்டார்.

விழாவில்சிறப்புரையாற்றிய தம்பி ராமையா பேசும்போது "பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை பாராட்டவும், கொண்டாடவும் வேண்டும். வீட்டிலிருக்கும்பெரியவர்களை மதிக்கவும் அவர்கள் சொற்படிக் கேட்கவும் வேண்டும். மூத்தோரை மதித்து நடக்கும் குழந்தைகள்தான் வாழ்க்கையில் வெற்றி பெறுவார்கள். இன்றளவும் நான் என் பெற்றொரை வணங்கி விட்டுத்தான் என் பணிகளைத் தொடங்குகிறேன். குழந்தைகள் தாய்தந்தையரை, ஆசிரியரை மதிக்க வேண்டும். கல்வியில் சிறந்து விளங்குவது மட்டுமல்ல பிற கலைகளிலும் வல்லுனர்களாக வரவேண்டும். ஒவ்வொரு குழந்தையிடத்திலும் ஒரு மாபெரும் திறமை ஒளிந்து கிடக்கிறது. அதை பெற்றோர்கள் கண்டுபிடித்து ஊக்குவிக்க வேண்டும். கல்வியில் உயர்ந்து மதிப்பு மிக்கவர்களாக மாணவர்கள் மாற வேண்டும். நான் பல பள்ளி ஆண்டுவிழாவிற்கு சென்றிருக்கின்றேன். ஆனால் ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் தங்கள் தனித்திறமைகளை வளர்த்துக்கொண்டு தேசிய அளவில் வெற்றிபெறுவதை நினைத்து நானும் புதுக்கோட்டைக்காரன்என்பதில் பெருமைப்படுகிறேன்" என்று குறிப்பிட்டார்.

கடந்த 2022-23ஆம் கல்வியாண்டில் மேல்நிலைப்பள்ளித் தேர்வில் நூற்றுக்கு நூறு பெற்றுத்தந்த சாதனை ஆசிரியர்கள் அபிராம சுந்தரி, ஆறுமுகம், துரக்காதேவி, சுகுனா ஆகிய ஆசிரியர்கள் ரொக்கப்பரிசு வழங்கிப் பாராட்டப்பட்டனர். கடந்தகல்வியாண்டுமுழுவதும் விடுப்பு எடுக்காமல் பள்ளிக்கு வந்த ஆசிரியை சுசீலா மற்றும் விங்ஸ் ஆண்டுமலரின் ஆசிரியர் காசாவயல் கண்ணன் ஆகியோர் விருதுகொடுத்து பாராட்டப்பட்டனர். சென்ற கல்வியாண்டில் 10, 12 ஆம் வகுப்புகளில் மாவட்ட அளவில் முதலிடம் பெற்ற பள்ளி மாணவர்கள், மாநில அளவில் பல வெற்றிகளைப் பெற்ற மாணவர்கள் சிறப்பு விருந்தினர்களால் விருதுகள் கொடுத்துகௌரவிக்கபட்டனர்.

விழாவில் பள்ளியின் ஆலோசகர் கவிஞர் அஞ்சலிதேவி தங்கம் மூர்த்தி, நிர்வாக இயக்குனர் நிவேதிதா மூர்த்தி, பள்ளியின் ஆலோசகர் நாகா அதியன், துணை முதல்வர் குமாரவேல், வழக்கறிஞர் செந்தில்குமார், பேராசரியர்கள் அய்யாவு மற்றும் கருப்பையா பாவேந்தர் பள்ளி காசிநாதன், மகாத்மா ரவிச்சந்திரன், கல்வித்துறை கணேஷ், கவிஞர் பீர்முகமது, புதுகைப்புதல்வன், அனைத்து ரோட்டரி சங்க உறுப்பினர்கள், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தினர், அறிவியல் இயக்க தலைவர்கள், புதுக்கோட்டை மற்றும் அறந்தாங்கியை சேர்ந்த பள்ளி முதல்வர்கள், தாளாளர்கள் மற்றும் பத்திரிக்கை, தொலைக்காட்சி நிருபர்கள் ஆகியோர் நிகழ்வில் கலந்துகொண்டு குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகளைப் பாராட்டி வாழ்த்தினார்கள். பள்ளியின் ஒருங்கிணைப்பாளர்கள் கௌரி, அபிராமசுந்தரி, வரலெட்சுமி, கோமதிப்பிள்ளை, மேலாளர் ராஜா, ஆசிரியர்கள் உதயகுமார், கணியன் செல்வராஜ், ராமன், நீலகண்டன், மணீஷ் ஆகியோர் விழாவிற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

முன்னதாக பள்ளியின் ஆலோசகர் கவிஞர் நாகா அதியன் வரவேற்க நிறைவாக துணை முதல்வர் குமாரவேல் நன்றி கூறினார். நிகழ்வினை ஆசிரியர்கள் காசாவயல் கண்ணன், ஆனந்தி, சுபஷ்டி ஆகியோர் தொகுத்து வழங்கினர்.



▶ தென்காசி மாவட்டம், சிவகிரி பாரத் மழலையர் மற்றும் துவக்க பள்ளியில் குடியரசு தினவிழா கொண்டாடப்பட்டது. பாரத் பள்ளி முதல்வர் வெங்கடேஸ்வரி அனைவரையும் வரவேற்றார், பள்ளி சேர்மன் மருத்துவர் சுசித்ரா என்ற ஆர்த்தி தேசியகொடி ஏற்றிவைத்தார். பள்ளியின் தாளாளர் மருத்துவர் செ.சு.செண்பக விநாயகம் வாழ்த்துரை வழங்கினார், பள்ளி மாணவர்கள் மற்றும் மாணவிகள் தேசிய கொடி ஏந்தி கலைநிகழ்ச்சிகள் மற்றும் தேசிய தலைவர்களின் வேடங்களில் வந்தது சிறப்பித்தனர், அவர்களுக்கு நினைவு பரிசுகளும் இனிப்புகளும் வழங்கப்பட்டது, ஆசிரியை கலைவாணி மற்றும் சுருளீஸ்வரி நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களின் பெயர்களை தொகுத்து வழங்கினார். ஆசிரியை கனகவள்ளிநன்றி கூறி நிறைவு செய்தார்.

# சிஐடியு செய்தி: புதுக்கோட்டையில் 1,000 சந்தாக்காள் ஒப்படைப்பு

**புதுக்கோட்டை : ஜன. 29,**

**இந்திய தொழிற்சங்க மையம் நடத்துகின்ற சிஐடியு செய்தி இதழுக்கு புதுக்கோட்டை மாவட்டத்திலிருந்து ஆயிரம் சந்தாக்கள் மாநில பொதுச் செயலாளர் ஜி.சுகுமாறனிடம் ஒப்படைக்கப்பட்டது.**



இந்திய தொழிற்சங்க மையம் (சிஐடியு) புதுக்கோட்டை மாவட்ட சிறப்புப் பேரவைக்கூட்டம் புதுக்கோட்டையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்டத் தலைவர் கே.முகமதலிஜின்னா தலைமை வகித்தார். சங்கத்தின் அகில இந்திய ஒர்கிங் கமிட்டி முடிவுகளை விளக்கி மாநில பொதுச் செயலாளர் ஜி.சுகுமாறன் சிறப்புரையாற்றினார். அவரிடம் புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும் சேகரிக்கப்பட்ட சிஐடியு செய்தி 1,000 இதழுக்கான சந்தா தொகை ரூ.1,60,000 வழங்கப்பட்டது.

மாநிலக்குழு முடிவுகளை விளக்கிமாநில செயலாளர் எம். ஐடாஹெலன், மாவட்டக்குழு முடிவுகளை விளக்கி மாவட்டச் செயலாளர் ஏ.ஸ்ரீதர் ஆகியோர் பேசினர். முன்னதாக ஏ.முகமதுகணி வரவேற்க, மாவட்டப் பொருளாளர் எஸ். பாலசுப்பிரமணியன் நன்றி கூறினார்.

பேரவையில் மாநில செயலாளர் எஸ்.தேவமணி, மாவட்ட நிர்வாகிகள் சி.அன்புமணவாளன், சி.மாரிக்கண்ணு, க.ரெத்திவேல், கே.நடராஜன், ஆர்.மணிமாறன், வி.சி. மாணிக்கம், ஏ.ஆர். பாலசுப்பிரமணியன் உள்ளிட்டோர் 300-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பங்கேற்றனர்.

# தென்காசி அருகே கார் – லாரி மோதிய விபத்தில் 6 பேர் உயிரிழப்பு

**தென்காசி : ஜன. 29,**

**தென்காசி மாவட்டம், சொக்கம்பட்டியில் கொல்லம்-திருமங்கலம் தேசிய நெடுஞ்சாலை புன்னையாபுரத்தில் அதிகாலை 3.50 மணிக்கு குற்றாலம் குளித்துவிட்டு வரும் வழியில் ஹோண்டா சென் மாருதியும், லாரியும் நேருக்கு நேர் மோதியதில் புளியங்குடி பகவதி அம்மன் கோவில் தெருவை சேர்ந்த கார்த்திக் டிரைவர், வேல், மனோஜ், சுப்பிரமணியன், மனோகரன், போத்திராஜ் ஆகியோர் விபத்து ஏற்பட்டு மரணம் அடைந்தனர்.**



தகவல் அறிந்த தென்காசி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் சுரேஷ் நேரில் சென்று பார்வையிட்டார். சொக்கம்பட்டி காவல் ஆய்வாளர் உடையார்சாமி, கடையநல்லூர் காவல் ஆய்வாளர் ராஜா, புளியங்குடி காவல் ஆய்வாளர் பாலகிருஷ்ணன், மருது ஆகியோர் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். சம்பவத்தை தொடர்ந்து மதிமுக துணை பொதுச்செயலாளர் திமு. ராஜேந்திரன், வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் சதன் திருமலை குமார், வடக்கு மாவட்ட செயலாளர் சுதா பாலசுப்பிரமணியன், நகரச் செயலாளர் ஜாகிர் உசேன் ஆகியோர் விபத்து நடந்த இடத்தை பார்வையிட்டு, விபத்தில் இறந்த ஆறு பேரின் வீடுகளுக்குச் சென்று ஆறுதல் கூறினர். மேலும் விபத்துக்குள்ளான ஆறு பேரின் உடல்களும் பாளையங்கோட்டை அரசு மருத்துவமனைக்கு உடற்கூறு ஆய்விற்காக எடுத்துச் செல்லப்பட்டது.

# கடையநல்லூர் தாருஸ்ஸலாம் மேல்நிலைப்பள்ளியில் 75-வது குடியரசு தின விழா

**கடையநல்லூர் : ஜன. 29,**

**தென்காசி மாவட்டம், கடையநல்லூரில் இந்திய திருநாட்டின் 75-வது குடியரசு தின விழா நூற்றாண்டை கடந்த புகழ்பெற்ற தாருஸ்ஸலாம் மேல் நிலைப் பள்ளியில் நடைபெற்றது.**



பள்ளி தலைமை ஆசிரியர் க.கோ.சிக்கந்தர் கொடிஏற்றிவைத்து சிறப்புறையாற்றினார். 2023-2024 ம் கல்வி ஆண்டின் தேசிய வருவாய் கல்வி திட்டத்தின் கீழ் என்.எம்.எம்.எஸ்.தேர்வில் தாருஸ்ஸலாம் பள்ளியின் சார்பில் 15 மாணவ, மாணவிகள் தேர்வில் வெற்றி பெற்றனர். அவர்களுக்கு ஆண்டிற்கு ரூ. 12000 வீதம் 4 ஆண்டிற்கு ரூ. 48000 ஸ்காலர்சிப் கொடுக்கப்பட்டது. மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ் மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டது.

மேலும் நகரின் முத்தாய்ப்பாய் பாரத பிரதமர்யாசவி திட்டத்திற்கு தாருஸ்ஸலாம் பள்ளியில் இருந்து 19 மாணவ, மாணவிகள் தேர்வாகியிருக்கின்றனர் என்பதை பெருமைப்படுத்தும் விதமாக நன்றி தெரிவித்துக் கொண்டனர். நடைபெற்று முடிந்த பொங்கல் விழா கவியரங்கு மற்றும் ஏனைய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. இறுதியாக நாட்டுப்பண் இசைக்கப்பட்டு விழா இனிதே நிறைவு பெற்றது.

# செம்பனார்கோவிலில் குடியரசு தின விழா கிராம சபா கூட்டம்

**தரங்கம்பாடி : ஜன. 29, மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுகா, செம்பனார்கோவில் ஒன்றியத்திற்கு உட்பட்ட பரசலூர் ஊராட்சியில் குடியரசு தின விழா சிறப்பு கிராம சபா கூட்டம் நடைபெற்றது.**



செம்பொனார்கோவில் ஒன்றியம், பரசலூர் ஊராட்சியில் குடியரசு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு கிராம சபா கூட்டத்திற்கு ஊராட்சி மன்ற தலைவர் சண்முகம் தலைமை வகித்தார். மாவட்ட ஊராட்சி குழு தலைவர் உமா மகேஸ்வரி சங்கர், ஒன்றிய குழு தலைவர் நந்தினி ஸ்ரீதர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் ஏ.பி. மகாபாரதி, பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும், மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம்.முருகன் ஆகியோர் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசினர்.

கிராம சபா கூட்டம் என்பது மக்களுக்கான கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான சிறந்த நிகழ்வு. குறிப்பாக கிராம சபா கூட்டத்தில் மக்களின் பங்களிப்பு கண்டிப்பாக இருக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு தொடர்ந்து அறிவுறுத்தி வருகிறது. கிராம சபா கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்கள் கிராமத்தின் வளர்ச்சிக்கு மிகவும் உகந்தததாக இருக்கும். மேலும் தமிழ்நாடு அரசானது கிராம மற்றும் நகர்புற வளர்ச்சிக்கு பல்வேறு வளர்ச்சித்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

குறிப்பாக கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம், மக்களுடன் முதல்வர், மக்களை தேடி மருத்துவம், முதல்வரின் கிராம சாலைகள் திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் போன்ற திட்டங்கள் மக்களிடம் நேரடியாக சென்றடைந்து வருகிறது.

மக்களுக்கு தேவையான அனைத்து வகையிலும் வளர்ச்சி திட்டங்களை மாவட்ட நிர்வாகம் நிறைவேற்றி வருகிறது. பொதுமக்கள் அரசின் நலத்திட்டங்களை அறிந்து பயன்படுத்தி கொள்ள வேண்டும். இக்கிராம சபாவில் பெறப்பட்ட கோரிக்கைகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து சமூக நலத்துறை சார்பில் பெண் குழந்தைகளை காப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் விழிப்புணர்வு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

பின்னர் சமூகநலத்துறை சார்பில் இரண்டு பெண் குழந்தைகள் திட்டத்தின் கீழ் 5 குழந்தைகளுக்கு மரக்கன்றுகளையும், வேளாண்மைத்துறை சார்பில் ரூ. 12500 மதிப்பிலான இடுப்பொருட்களையும் மாவட்ட ஆட்சியர் ஏ.பி. மகாபாரதி, எம்எல்ஏ நிவேதா முருகன் வழங்கினர்.

இதில் மாவட்ட ஊராட்சி உறுப்பினர் துளசிரேகா ரமேஷ், உதவி இயக்குநர் மஞ்சுளா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மீனா, மஞ்சுளா, வட்டாட்சியர் சரவணன், ஊராட்சிமன்ற துணைத்தலைவர் சங்கீதாநாராயணன் திமுக மாவட்ட, ஒன்றிய, பேரூராட்சி நிர்வாகிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளாட்சி அமைப்பினர் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



**கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோயில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இந்திய திருநாட்டின் 75 வது குடியரசு தின விழா கொண்டாட்டம் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் சத்தியா பர்வீன் நிஜார் அகமது தேசியக்கொடி ஏற்றி அனைவருக்கும் இனிப்பு வழங்கி கொண்டாடினார் நிகழ்ச்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சுகுமாரன் ராஜேந்திரன் ஒன்றிய பொறியாளர் சந்தான கிருஷ்ணன் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் வட்டார மேலாளர்கள் ஏனைய பணியாளர்கள் கலந்து கொண்டனர்**

# புதுக்கோட்டை வைரம்ஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 35 வது ஆண்டு பவள விழா



**புதுக்கோட்டை : ஜன. 29, புதுக்கோட்டை வைரம்ஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 35 வது ஆண்டு பவள விழா சிறப்பாக நடைபெற்றது.**

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக தமிழக சட்டத்துறை அமைச்சர் ரகுபதியின் மகனும், சென்னை கற்பக விநாயகா கல்வி நிறுவனங்களின் தலைவருமான டாக்டர். அண்ணாமலை ரகுபதி தலைமையேற்று விழாவினைச் சிறப்பித்தார். இவ்விழாவில் நித்தின் செல்லையா (UKG) India Book of Record- ல் இடம் பெற்றதற்கும் கலாம் விருதை பெற்றதற்கும் வாழ்த்து தெரிவித்தார். மேலும் ஸ்ரீஹரன் என்ற 12 ஆம் வகுப்பு மாணவன் பள்ளிக்கு உதவிமையமாக செயல்படும் ரோபோவை உருவாக்கி நிகழ்ச்சியில் அறிமுகம் செய்து இயக்கினார். அவருக்கு பள்ளியின் சார்பில் ரூபாய் 20,000/- காசோலையையும் பள்ளியில் 10 மற்றும் 30 வருடங்களுக்கு தொடர்ச்சியாக பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் பணியாளர்களுக்கும் சிறப்பு பரிசாக தங்க மோதிரத்தை வழங்கினார்.

அதனை தொடர்ந்து அண்ணாமலை ரகுபதி பேசுகையில்; புதுக்கோட்டையின் சிறப்புகளையும் பத்து வருடங்களுக்கு ஒரு முறை தலைமுறை மாற்றம் நிகழ்கிறது என்றும் இப்பொழுது உள்ள பெற்றோர்கள் இருவரும் பணிக்குச் செல்வதால் குழந்தைகளைக் கவனிக்க முடியவில்லை. எனும் நிலை மாற்றி, பெற்றோர்கள் குழந்தைகள் மீது கவனம் செலுத்த வேண்டும் என்றும் சிறந்த பள்ளி என்பது சிறந்த ஆசிரியர்களால் உருவாக்கப்படுகிறது, ஆசிரியர்கள் மாணவர்களின் வாழ்க்கை தரம் உயர பாடுபட வேண்டும் என்றும் கூறினார். முயலும் வெல்லும் ஆமையும் வெல்லும் முயலாமை என்றும் வெல்லாது என்று கூறி தனது உரையை நிறைவு செய்தார்.

மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இவ்விழாவில் பள்ளியின் தாளாளர் ரகுபதி சுப்ரமணியம், பள்ளியின் தலைவர் தேனாள் சுப்ரமணியம், பள்ளியின் ஒருங்கிணைப்பாளர் அஸ்வினி நாச்சம்மை, பள்ளியின் நிர்வாக உறுப்பினர்கள் ஏஆர்எஸ். சுப்பிரமணியன், சீனிவாசன், டாக்டர்.பி.எல். சுப்பிரமணியன், எம்எஸ்எம். முத்துராமன், பள்ளியின் முதல்வர் எஸ்ஏ. சிராஜுதின், பள்ளியின் துணை முதல்வர் எஸ்.சுப்பிரமணியன், ஆசிரியர்கள் பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டு விழாவினைக் கண்டு மகிழ்ந்தனர். தேசிய கீதத்துடன் விழா இனிதே நிறைவுற்றது.

# செம்பனார்கோவிலில் ரூ.1.86 கோடியில் புதிய சார்பதிவாளர் அலுவலக கட்டடம் அடிக்கல் நாட்டு விழா

**தரங்கம்பாடி : ஜன. 29, மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோவில் ரூ.1.86 கோடி செலவில் புதிய சார்பதிவாளர் அலுவலக கட்டடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.**



செம்பனார்கோவில் அருகே பரசலூர் ஊராட்சி பகுதியில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்தில் திருவிளையாட்டம், மேமாத்தூர், கீழையூர், நல்லாடை, செம்பனார்கோவில், ஆறுபாதி, வடகரை உள்ளிட்ட கிராமங்களில் பொதுமக்கள் நிலம் பத்திர பதிவு, திருமண பதிவுகள் உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்கு பயன்படுத்தி வந்தனர்.

இந்த நிலையில் நூறு ஆண்டுகள் பழைமையான இந்த கட்டடம் பழுதடைந்து நிலையில் இடிந்து விழும் நிலையில் இருந்த வந்தன. பொதுமக்கள் பயன்பெறும் வகையில் புதிய கட்டடம் கட்டுவதற்கு நிர்வாகம் மற்றும் நிதித்துறையின் கீழ் ரூ.1.86 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு புதிய சார்பதிவாளர் அலுவலகம் கட்டடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

நிகழ்ச்சியில் ஒன்றிய குழு தலைவர் நந்தினி ஸ்ரீதர் தலைமை வகித்தார், சார்பதிவாளர் கவியரசு, மாவட்ட கூட்டுறவு சங்கம் தலைவர் ஞானவேலன், ஊராட்சி மன்ற தலைவர் சண்முகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் பூம்புகார் தொகுதி சட்ட மன்ற உறுப்பினரு மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம்.முருகன் கலந்து கொண்டு புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நட்டு பணியை தொடங்கி வைத்து பேசினார்.

இதில் தஞ்சை மண்டல திமுக தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் பி.எம். ஸ்ரீதர், ஒன்றிய செயலாளர் அப்துல் மாலிக், பேரூராட்சி திமுக செயலாளர் முத்துராஜா, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் வெண்ணிலா தென்னரசு, உதவி செயற்பொறியாளர் அல்மாஸ் பேகம், உதவி பொறியாளர் சுவாதி, ஊராட்சி மன்ற தலைவர்கள், ஒன்றிய குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# புதிய வழித்தடத்தில் இயக்கப்பட்ட அரசு பேருந்துக்கு ஆரணியில் உற்சாக வரவேற்பு

**ஊத்துக்கோட்டை : ஜன. 29, ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் புதிய வழித்தடத்தில் ஒரு பேருந்து இயக்கப்படும் என போக்குவரத்து துறை அமைச்சர் சட்டசபையில் உறுதி அளித்தார்.**



இதன் அடிப்படையில் திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதியையும் - பொன்னேரி தொகுதியையும் இணைக்கும் வகையில் அரசு போக்குவரத்து கழக பேருந்து தடம் எண்: 115 பி என்ற பேருந்து இயக்கப்பட்டது. இந்தப் பேருந்து கும்மிடிப்பூண்டி பஸ் நிலையத்தில் இருந்து புதுகும்மிடிப்பூண்டி, சிறுபுழல்பேட்டை, பாத்தபாளையம், பில்லாகுப்பம், குருவராஜகண்டிகை, ராஜாகண்டிகை, ஐயர்கண்டிகை, கண்ணூர், பாலவாக்கம், சுப்பிரமணியநகர் வழியாக ஆரணி பேருந்து நிலையம் வந்து சேரும். மீண்டும் இதே வழித்தடத்தில் இந்தப் பேருந்து செல்லும். இந்த பேருந்தை இயக்கி வைக்கும் நிகழ்ச்சி கும்மிடிப்பூண்டி பேருந்து நிலையத்தில் நடைபெற்றது.

இதனை திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ. கோவிந்தராஜன் கொடி அசைத்து துவக்கி வைத்தார். பின்னர், இந்தப் பேருந்தை சிறிது தூரம் அவர் ஓட்டினார். பேருந்தில் பயணம் செய்து கும்மிடிப்பூண்டி தொகுதி மக்களை உற்சாகப்படுத்தினார். மேலும், இப்பேருந்தில் கட்சி நிர்வாகிகளுடன் பயணம் செய்து பொன்னேரி தொகுதியைச் சேர்ந்த ஆரணிக்கு வந்தார். அவருக்கு ஆரணி பேரூர் திமுக செயலாளர் பி.முத்து தலைமையில் உற்சாகமாக வரவேற்பு அளித்தனர்.

இதன் பின்னர், பேருந்து நிறுத்தம் அருகே உள்ள அண்ணாவின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்கப்படுவதால் பயண நேரம் குறையும், இதனால் நெசவாளர்கள் பயன் பெறுவர் என்று டி.ஜே. கோவிந்தராஜன் பேசினார். மேலும், இப்பேருந்தை பனையஞ்சேரி வரையில் இயக்க வேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். எனவே, அதற்கு உண்டான பணிகளை விரைவில் அதிகாரிகள் மேற்கொண்டு பனையஞ்சேரி வரையில் இந்த பஸ்ஸை இயக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று டி.ஜே.கோவிந்தராஜன் உறுதி கூறினார்.

இந்நிகழ்ச்சியில், இ.ஏ.பி.சிவாஜி, கே.வி. லோகேஷ், எஸ்.ரமேஷ், தண்டலம் கிருஷ்ணமூர்த்தி, டி.கே.சந்திரசேகர், மு.மணிபாலன், ராமஜெயம், பா.சே.குணசேகரன், ஆரணி முன்னாள் பேரூர் செயலாளர்கள் டி.கண்ணதாசன், ஜி.பி. வெங்கடேசன், ஆரணி பேரூர் பொருளாளர் கு.கரிகாலன் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# சிறுவாபுரியில் மனிதநேய வார விழாவில் ஆதிதிராவிடர் பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்டித்தர வேண்டும் என கோரிக்கை

**ஊத்துக்கோட்டை : ஜன. 29, திருவள்ளூர் மாவட்ட காவல்துறை சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு சார்பில் மனிதநேய வார விழா கடந்த வெள்ளிக்கிழமை துவங்கி வரும் புதன்கிழமை வரையில் நடைபெறுகிறது. இந்நிலையில், சோழவரம் ஒன்றியம், சின்னம்பேடு என்று அழைக்கப்படும் சிறுவாபுரியில் மனிதநேய வார விழா நிகழ்ச்சி நடைபெற்றது.**



ஊராட்சி மன்ற அலுவலகம் அருகே நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு ஊராட்சி மன்ற தலைவர் ஜான்சிராணி ராஜா தலைமை தாங்கினார். வட்டச் சட்டக் பணிகள் குழுவைச் சேர்ந்த துளசிராமன், ஒன்றிய குழு உறுப்பினர் சந்துரு, ஊராட்சி மன்ற துணைத் தலைவர் சேகர் மற்றும் வார்டு உறுப்பினர்கள் முன்னிலை வகித்தனர். இதில், சிறப்பு அழைப்பாளராக பொன்னேரி தாசில்தார் சித்ரா கலந்துகொண்டு பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு சிறப்புரையாற்றி பேசினார். இந்நிகழ்ச்சியில், சிறுவாபுரி, சின்னம்பேடுபேட்டை, அகரம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

அப்போது ஊராட்சி மன்ற தலைவரிடம் பொதுமக்கள் சார்பில் இந்த ஊராட்சியில் உள்ள ஆதிதிராவிடர் பள்ளிக்கு சுற்றுச்சுவர் அமைத்து தர வேண்டும், ஏரியில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டும். சிறுவாபுரி கோவிலில் சுவாமி தரிசனம் செய்ய உள்ளூர் பக்தர்கள் விரைவாக தரிசனம் செய்ய உரிய வழிவகை செய்து தர வேண்டும். மேலும், செவ்வாய்க்கிழமைகளில் கோவில் அருகே ஏற்படும் போக்குவரத்து நெரிசலை போக்க மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுவை தாசில்தாரிடம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மனித உரிமைகள் பிரிவு சப்-இன்ஸ்பெக்டர்கள் மேகநாதன், பிரதாபன், ரங்கநாதன், புஷ்பராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். முடிவில், ஊராட்சி செயலர் பரசுராமன் நன்றி கூறினார்.





**திருவள்ளூர் மாவட்டம், புழல் ஒன்றியம் அலுவலக வளாகத்தின் முன்பு 75 வது குடியரசு தின விழா கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் புழல் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் தங்கமணி திருமால் தேசிய கொடியேற்றி வைத்து கொடிக்கு மரியாதை செய்து இனிப்புகள் வழங்கினர். இந்நிகழ்ச்சியில் துணை சேர்மன் சாந்தி பாஸ்கர் மற்றும் அரசு பணியாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.**

# எல்லாபுரம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் குடியரசு தினத்தை முன்னிட்டு கொடியேற்றி இனிப்பு வழங்கினர்

**ஊத்துக்கோட்டை : ஜன. 29. திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையத்தில், எல்லாபுரம் வட்டார வளர்ச்சி அலுவலகம் இயங்கி வருகிறது.**



இங்கு 75-வது குடியரசு தினத்தை முன்னிட்டு தேசிய கொடியை ஒன்றிய பெருந்தலைவர் வடமதுரை கே.ரமேஷ் ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். மாணவர்களுக்கு இனிப்பு வழங்கினர். இந்நிகழ்ச்சியில், வட்டார வளர்ச்சி அலுவலர் கிராம ஊராட்சிகள் சத்தியமூர்த்தி, ஒன்றிய துணை பெருந்தலைவர் வழக்கறிஞர் கே.சுரேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஏ-2 கோதண்டராமன், கணக்கர் ஸ்ரீதர், அலுவலக உதவியாளர்கள் சத்யநாராயணன், ராஜசேகர், ரகுபதி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையத்தில், எல்லாபுரம் வட்டார கல்வி அலுவலகம் இயங்குகிறது. இங்கு 75-வது குடியரசு தினத்தை முன்னிட்டு தேசிய கொடியை வட்டார கல்வி அலுவலர் சாதுசுந்தர்சிங் ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். மாணவர்களுக்கு இனிப்பு வழங்கினார். இந்நிகழ்ச்சியில், உதவியாளர் செ.வேதமுத்து, பதிவரை எழுத்தர் ஆர்.பாஸ்கர் ஆகியோர் இருந்தனர்.

# திருவள்ளூர் வடக்கு மாவட்ட மாணவரணி சார்பில் வீரவணக்க நாள் பொதுகூட்டம்

ஊத்துக்கோட்டை : ஜன. 29, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் திருவள்ளூர் வடக்கு மாவட்ட மாணவரணி சார்பில் மொழி போர் தியாகிகளின் நினைவை போற்றும் வகையில் வீரவணக்க நாள் பொதுகூட்டம் திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஒன்றியம், கவரப்பேட்டை ஜிஎன்டி சாலையில் உள்ள மேம்பாலம் அருகே நடைபெற்றது.



மொழிப்போர் தியாகிகளின் நினைவு நாளில் அவர்களை வணங்கி போற்றும் வகையில் நடைபெற்ற இந்த பொதுக்கூட்டத்துக்கு திருவள்ளூர் வடக்கு மாவட்ட மாணவரணி செயலாளர் எஸ்.ராகேஷ் தலைமை தாங்கினார். திருவள்ளூர் வடக்கு மாவட்ட கழக செயலாளரும், பொன்னேரி தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான சிறுணியம் பி.பலராமன் முன்னிலை வகித்தார். இதில், அனைத்துலக எம்ஜிஆர் மன்ற செயலாளரும், கழகச் செய்தி தொடர்பாளரும், முன்னாள் அமைச்சருமான சி.பொன்னையன் கலந்து கொண்டு மொழிப்போரில் உயிர் நீத்த தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தி, வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் சிறப்புரையாற்றி பேசினார். இதில், கழக செய்தி தொடர்பாளர் டாக்டர் எம். ஜிமீலா, தலைமை கழகப் பேச்சாளர் காஞ்சி வி.இராமு, எல்லாபுரம் ஒன்றிய கழகச் செயலாளர் கே.எஸ். விஜயகுமார் ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்.

இக்கூட்டத்தில், வி. கோபால் நாயுடு, கே.எம். எஸ்.சிவக்குமார், ஆர். அபிராமன், மாவட்டத் துணைச் செயலாளர் சியாமளாதன்ராஜ், எஸ். எம்.ஸ்ரீதர், மாவட்ட வர்த்தக அணி செயலாளர் ஓம்சக்தி குணபூபதி, ஆரணி பேரூர் கழகச் செயலாளர் ஏ.எம்.தயாளன், மங்கலம் டி.வெங்கடேசன், ஓடை ராஜேந்திரன், டி.முல்லைவேந்தன், ஜே.ரமேஷ் குமார், இரா. டேவிட் சுதாகர் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# காஞ்சிபுரம் ஒன்றியத்திற்குட்பட்ட பல்வேறு பகுதியில் நலத்திட்ட பணிகளை அடிக்கல் நாட்டு விழா

**காஞ்சிபுரம் : ஜன. 29, காஞ்சிபுரம் ஒன்றியத்திற்குட்பட்ட பல்வேறு பகுதியில் சாலை அமைத்தல், பள்ளி கட்டிடம், அங்கன்வாடி கட்டிடம், நியாய விலை கட்டிடம் உள்ளிட்டவை கட்டப்பட்டு வருகிறது.**

அந்த வகையில் காஞ்சிபுரம் ஒன்றியத்திற்குட்பட்ட கோனேரிக்குப்பம், சிறுனை, கூரம் மற்றும் முட்டவாக்கம் ஆகிய ஊராட்சிகளில் மாவட்ட ஊராட்சி குழு நிதியில் இரண்டு ஊராட்சிகளில் சிமெண்ட சாலை அமைக்கும் பணி, இளைஞர் மற்றும் மாணவர்களின் கோரிக்கை நிறைவேற்றும் வகையில் உடற்பயிற்சி கூடத்திற்கு கட்டிடம் கட்டும் பணி, இரண்டு கூடுதல் வகுப்பறைக் கட்டிடம் கட்டும் பணி உள்ளிட்ட பல்வேறு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. இதில் காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் நித்யா சுகுமார் கலந்து கொண்டு மாவட்ட ஊராட்சி குழு




நிதியில் இருந்து கட்டப்படும் கட்டிடங்கள் மற்றும் சாலை அமைக்கும் பணியினை அடிக்கல் நாட்டி துவக்கி வைத்து பொதுமக்களுக்கு இனிப்புகளையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.எஸ். சுகுமார், ஒன்றிய கழக துணை செயலாளர் இளஞ்செழியன், ஊராட்சி மன்ற தலைவர்கள், ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர்கள், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட பொறியாளரணி அமைப்பாளர் ஆ.சசிகுமார், ஆடலரசு (எ)சீமான், கிளை கழக செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் தினேஷ் பாபு உடனிருந்தனர்.

**காரைக்கால், பட்டினம் சேரி மீனவர் கிராம பஞ்சாயத்தார்கள் நேற்று ஆனந்த குமாரை நேரில் சந்தித்து அவர்களது போராட்டத்திற்கு இந்திய ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் ஆதரவு கோரினர். அதற்கு இந்திய ஊழல் எதிர்ப்பு இயக்கம் மீனவர் சொந்தங்களின் வலி தீர தோள் கொடுக்கும் என்று ஆனந்தகுமார் தெரிவித்தார்.**





# வரலாறு உலகம்

## பாகிஸ்தானில் நிமோனியா பரவல் : ஒரே மாதத்தில் 240-க்கும் மேற்பட்ட குழந்தைகள் உயிரிழப்பு

**இஸ்லாமாபாத் : ஜன. 29,**

**கடும் குளிர் காரணமாக குழந்தைகளுக்கு அதிக அளவில் நிமோனியா பாதிப்பு ஏற்பட்டு வருகிறது.**



பாகிஸ்தானில் உள்ள பஞ்சாப் மாகாணத்தில் நிமோனியா பாதிப்பு வேகமாக பரவி வருகிறது. பாகிஸ்தானில் தற்போது நிலவி வரும் கடும் குளிர் காரணமாக நிமோனியா பரவல் மேலும் அதிகரித்துள்ளதாக சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக குழந்தைகள் அதிக அளவில் நிமோனியாவால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். பஞ்சாப் மாகாணத்தில் கடந்த ஒரே மாதத்தில் 244 குழந்தைகள் நிமோனியா பாதிப்பால் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மேலும் கடந்த 24 மணி நேரத்தில் பஞ்சாப் மாகாணத்தில் புதிதாக 942 பேருக்கும், லாகூரில் 212 பேருக்கும் நிமோனியா பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நிமோனியா பரவலை கட்டுப்படுத்த பாகிஸ்தான் சுகாதாரத்துறை பல்வேறு நோய்த்தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

## ஹமாசுக்கு உதவியதாக குற்றச்சாட்டு : ஐ.நா. அகதிகள் அமைப்புக்கு நிதி உதவியை நிறுத்திய 9 நாடுகள்

**வாஷிங்டன் : ஜன. 29,**

**இஸ்ரேல் மீது கடந்த ஆண்டு அக்டோபர் 7-ந் தேதி ஹமாஸ் அமைப்பினர் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தினர். இதில் 1200-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். மேலும் 250-க்கும் மேற்பட்டோரை பிணைக்கைதிகளாக பிடித்தனர்.**



இதையடுத்து ஹமாஸ் நிர்வகித்து வரும் காசா மீது இஸ்ரேல் போரை தொடங்கியது. இதில் 26 ஆயிரம் பேர் பலியாகி உள்ளனர். மூன்று மாதங்களுக்கு மேலாக போர் நீடித்து கொண்டிருக்கிறது. இதற்கிடையே இஸ்ரேல் மீதான அக்டோபர் 7-ந்தேதி தாக்குதலில் ஐ.நா.வின் பாலஸ்தீன அகதிகள் முகமையை சேர்ந்த ஊழியர்கள் சிலருக்கு இதில் தொடர்பு இருப்பதாக இஸ்ரேல் குற்றச்சாட்டு தெரிவித்தது.

ஐ.நா.வின் பாலஸ்தீன அகதிகளுக்கான முகமை, காசாவில மனிதநேய உதவிகளை செய்து வருகிறது. இதில் 13 ஆயிரம் பேர் பணியாற்றுகிறார்கள். இதில் பெரும்பாலானவர்கள் பாலஸ்தீனியர்கள். இந்த முகமை மீதான குற்றச்சாட்டையடுத்து சில ஊழியர்களை ஐ.நா. பணிநீக்கம் செய்தது.

இந்நிலையில் ஐ.நா.வின் பாலஸ்தீன அகதிகள் முகமைக்கு நிதி உதவியை நிறுத்துவதாக அமெரிக்கா, இங்கிலாந்து அறிவித்தன. இதுகுறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சகம் கூறும்போது, "இஸ்ரேலில் ஹமாஸ் நடத்திய தாக்குதலில் ஐ.நா.வின் பாலஸ்தீன அகதிகள் அமைப்பு ஊழியர்களுக்கு தொடர்பு இருப்பதாக கூறப் படும் குற்றச்சாட்டு அதிர்ச்சி அளிக்கிறது. அந்த அமைப்புக்கு நிதிஉதவி அளிப்பது நிறுத்தி வைக்கப்படுகிறது" என்று தெரிவித்தது. இதே கருத்தை இங்கிலாந்தும் தெரிவித்து உள்ளது.

இதற்கிடையே ஐ.நா.வின் பாலஸ்தீன அகதிகள் முகமைக்கு நிதிஉதவியை நிறுத்துவதாக மேலும் 7 நாடுகள் அறிவித்தது. கனடா, ஜெர்மனி, இத்தாலி, நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து, பின்லாந்து, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளும் நிதிஉதவி அளிப்பதை நிறுத்துவதாக தெரிவித்துள்ளது. நிதிஉதவியை நிறுத்தியதற்கு பாலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. முகமை தலைவர் பிலிப் லாசரினி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் கூறும்போது, "நிதிஉதவியை நிறுத்துவதாக அறிவித்து இருப்பது அதிர்ச்சி அளிக்கிறது. இந்த முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும். இந்த அமைப்பு காசாவில் முதன்மையான மனிதாபிமான நிறுவனமாகும். அதில் 20 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் தங்களது உயிர்வாழ்விற்காக சார்ந்து உள்ளனர். போருக்கு மத்தியில் இதுபோன்ற முடிவுகள் ஏற்கனவே தலைவிரித்தாடும் பஞ்சத்தை அதிகரிக்க செய்யும். காசாவில் உள்ள பாலஸ்தீனியர்களுக்கு மேலும் ஒரு கூட்டுத் தண்டனையை கொடுக்காதீர்கள்" என்றார்.

## ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் : இங்கிலாந்து கப்பலில் எரிந்த தீயை அணைக்க உதவிய இந்திய போர்க்கப்பல்

**பிரிட்டன் : ஜன. 29,**

**செங்கடல் மற்றும் ஏடன் வளைகுடா பகுதியில் செல்லக் கூடிய வர்த்தக கப்பல்கள் மீது ஏமனின் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதற்கிடையே ஏடன் வளைகுடா பகுதியில் இங்கிலாந்தைச் சேர்ந்த எண்ணெய் கப்பலான எம். வி. மர்லின் லுவாண்டா மீது ஏவுகணையை வீசி தாக்குதல் நடத்தினர்.**

இதில் கப்பலில் தீப்பிடித்து எரிந்தது. இதையடுத்து இங்கிலாந்து கப்பலில் இருந்தவர்கள், இந்திய கடற்படையின் ஐஎன்எஸ் விசாகப்பட்டினம் கப்பலை தொடர்புகொண்டு உதவி கேட்டனர். உடனே ஐஎன்எஸ் விசாகப்பட்டினம் கப்பலில் இருந்து தீயணைப்பு சாதனங்களுடன்மீட்புகுழுவினர் அங்கு அனுப்பப்பட்டனர். தாக்குதலுக்கு உள்ளான எண்ணெய் கப்பலில் 22 இந்தியர்கள் உள்ளனர். கப்பலில் எரிந்த தீயை கடுமையாக போராடி இந்திய மீட்புக்குழுவினர் அணைத்தனர்.

10 தீயணைப்பு வீரர்கள் அடங்கிய குழு 6 மணி நேர போராட்டத்திற்கு பிறகு தீயை



கட்டுக்குள் கொண்டுவந்ததாக இந்தியகடற்படை தெரிவித்தது. எண்னை கப்பலின் கேப்டன் அபிலாஷ் ராவத் கூறும்போது, இந்திய கடற்படை போர்க்கப்பலான ஐஎன்எஸ் விசாகப்பட்டினத்திற்கு நன்றி கூறுகிறேன்.இந்ததீயைஎதிர்த்து போராடும் நம்பிக்கையை நாங்கள் இழந்துவிட்டோம். தீயை அணைக்க இந்திய கடற்படை எங்களுக்கு உதவ முன்வந்ததற்கு நன்றி என்றார்.

## ரூ.23 கோடி மதிப்பிலான சொத்துகளை பூனைகள் மற்றும் நாய்களுக்கு எழுதி வைத்த மூதாட்டி

**பீஜிங் : ஜன. 29,**

**தனது பிள்ளைகள் 3 பேருக்கும் சொத்துகளை கொடுப்பதாக உயில் எழுதி இருந்த நிலையில்தான் உடல்நலம் பாதிக்கப்பட்டு இருந்தபோது யாரும் தன்னை பார்க்க வராததால் விரக்தியில் இவ்வாறு செய்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.**



சீனாவில் ஷாங்காய் நகரை சேர்ந்தவர் லியூ. மூதாட்டியான இவர் தனக்கு சொந்தமான ரூ.23 கோடி மதிப்புள்ள சொத்துகளை தனது 3 பிள்ளைகளுக்கும் பிரித்து கொடுக்கும் வகையில் உயில் எழுதி வைத்தார். ஆனாலும் அந்த மூதாட்டி உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டபோது அவரது பிள்ளைகள் 3 பேரும் ஒருமுறை கூட வந்து பார்க்கவில்லை. இது லியூவுக்கு அதிர்ச்சியையும், வேதனையையும் ஏற்படுத்தியது. இதனால் ஆவேசம் அடைந்த அவர் தனது உயிலை மாற்றி எழுதி சொத்துகள் அனைத்தையும் தான் வளர்க்கும் நாய்கள் மற்றும் பூனைகள் மீது எழுதி வைத்துள்ளார்.

இதை அறிந்த அவரது பிள்ளைகள் அதிர்ச்சியடைந்துள்ளனர். ஆனால், இதுபோன்ற செயல்களுக்கு அந்நாட்டு சட்டத்தில் இடமில்லை என்பதால், கால்நடை மருத்துவ மனையை துவக்கி, நாய், பூனையை நன்றாக பராமரிக்கும்படி, விலங்குகள் நல அமைப்பிடம் தொடர்பு கொண்டதாக கூறப்படுகிறது. இது தொடர்பான தகவல்கள் சமூக வலைதளங்களில் வெளியாகி வரும் நிலையில், பல பயனர்கள் கருத்துகளை பதிவிட்டு வருகின்றனர். சீனாவில் வளர்ப்பு பிராணிகள் மீது சொத்து எழுதி வைக்க அந்நாட்டு சட்டத்தில் இடமில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## உலகின் நீண்ட பயணிகள் கப்பல் பயணம் தொடங்கியது

## 'ஐகான் ஆப் தி சீஸ்' என பெயர் சூட்டிய மெஸ்ஸி

**மியாமி : ஜன. 29,**

**உலகின் மிக நீண்ட பயணிகள் கப்பல் 'ஐகான் ஆஃப் தி சீஸ்' நேற்று முன்தினம் சனிக்கிழமை மியாமி துறைமுகத்தில் இருந்து தன் முதல் பயணத்தை தொடங்கியது.**




அமெரிக்காவின் ஃப்ளோரிடா மாகாணத்தை சேர்ந்த புகழ் பெற்ற கப்பல் கட்டும் நிறுவனம் ராயல் கரீபியன். இந்நிறுவனம் 1,200 அடி நீளம் கொண்ட உலகின் மிக நீண்ட பயணிகள் சொகுசு கப்பலை உருவாக்கி உள்ளது. 20 தளங்களை கொண்ட இந்த கப்பலில் சுற்றுலா பயணிகளுக்கான அதிநவீன தங்கும் அறைகள், 6 நீர்சறுக்கு விளையாட்டுகள், ஒரு பனிசறுக்கு மைதானம், 7 நீச்சல் குளங்கள், ஒரு திரையரங்கம், 40 நவீன உணவகங்கள், பார்கள் இடம்பெற்றுள்ளன.

2,350 பணியாளர்களுடன் அதிகபட்சமாக 7,600 பயணிகளை ஏற்றி செல்லும் வகையில் கட்டப்பட்டுள்ள இந்த கப்பலுக்கு கால்பந்து ஜாம்பவான் மெஸ்ஸி மற்றும் அவரது இன்டர் மியாமி அணியினர் 'ஐகான் ஆஃப் தி சீஸ்' என பெயர் சூட்டியுள்ளனர். இதுகுறித்து ராயல் கரீபியன் குழும தலைவரும், தலைமை நிர்வாக அதிகாரியுமான ஜேசன் லிபர்டி "ஐகான் ஆஃப் தி சீஸ் என்பது 50 ஆண்டுகளுக்கும் மேலான எங்கள் கனவுகள், புதுமைகள் மற்றும் முயற்சிகளின் வெளிப்பாடு. உலகின் சிறந்த விடுமுறை அனுபவங்களை பயணிகளுக்கு வழங்கும் எங்கள் பொறுப்பின் உச்சம்" என்று கூறியுள்ளார். தென் ஃப்ளோரிடாவின் மியாமி துறைமுகத்தில் இருந்து நேற்று முன்தினம் சனிக்கிழமை புறப்பட்ட 'ஐகான் ஆஃப் தி சீஸ்' வெப்ப மண்டலங்களை சுற்றி 7 நாட்கள் பயணம் செய்ய உள்ளது.

## இந்தியாவுடன் மோதலை வலுவாக்கும் மாலத்திவு அதிபர் - சீனாவை புகழ்ந்து பேச்சு

**மாலே : ஜன. 29,**

**மாலத்தீவில் சமீபத்தில் நடந்த அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற முகமது முய்சு, இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்து வருகிறார்.**



சீன ஆதரவாளரான அவர், மாலத்தீவில் இருந்து இந்திய ராணுவ வீரர்கள் வெளியேற வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார். மேலும் சீனபயணத்தில் அந்நாட்டுடன் பல ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டார். பின்னர் நாடுதிரும்பிய முகமது முய்சு, இந்தியாவை மறைமுகமாக விமர்சித்தார். அவருக்கு மாலத்தீவின் முக்கிய இரண்டு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. இந்தியாவுடனான மோதல் போக்கு நல்லதல்ல என அறிவுறுத்தின. இந்த நிலையில் இந்தியாவை மீண்டும் சீண்டும் விதமாக முகமது முய்சு பேசி உள்ளார்.

இதுதொடர்பாக அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது:- மாலத்தீவின் இறையாண்மையை சீனா மதிக்கிறது. இரு நாடுகளும் ஒருவரையொருவர் மதிக்கின்றன. சீனாவின் பெல்ட் அண்ட் ரோடு திட்டம் முன்முயற்சியானது. இது இருதரப்பு உறவுகளை புதிய நிலைக்கு கொண்டு சென்றுள்ளது. மாலத்தீவின் உள்விவகாரங்களில் தலையிடும் நாடு சீனா அல்ல, இதனால்தான் இரு நாடுகளுக்கும் இடையே வலுவான உறவு உள்ளது. சீன-மாலத்தீவு உறவுகள் எதிர்காலத்தில் மேலும் வலுவடையும் என்று நம்பிக்கை உள்ளது.

சீன அதிபர் ஜின்பிங் குடிமக்களின் நலனை முதன்மைப்படுத்தி வருகிறார். அவரது தலைமையின் கீழ் சீனாவின் பொருளாதாரம் புதிய உச்சத்தை எட்டியுள்ளது. மாலத்தீவின் இலக்குகளை அடைய சீன அரசு உதவும் என்று ஜின்பிங் என்னிடம் உறுதியளித்துள்ளார். மாலத்தீவின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதும், மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப முன்னேற்றத்தை கொண்டு வருவதும் எனது இலக்கு. வளர்ந்த நாடுகளுடன் இணக்கமாக செயல்படும் நாடாக மாலத்தீவை மாற்ற விரும்புகிறேன் என்று அவர் கூறினார்.

## காற்று, தண்ணீர் இன்றி தவிப்பு விமானத்தின் அவசரகால கதவை திறந்து இறக்கையில் நடந்த பயணி : சக பயணிகள் ஆதரவு

மெக்சிகோ : ஜன. 29,

சக பயணிகளின் உயிரை காப்பாற்ற விமானத்தின் அவசரகால கதவை திறந்து இறக்கையில் நடந்த நபரால் பரபரப்பு ஏற்பட்டது.



மெக்சிகோ சிட்டி சர்வதேச விமான நிலையத்தில் இருந்து ஏரோமெக்சிகோ நிறுவனத்துக்கு சொந்தமான ஏஎம்672 பயணிகள் விமானம் வெள்ளிக்கிழமை காலை 8.45 மணிக்கு கவுத்தமாலா புறப்பட தயாராக இருந்தது. ஆனால் பராமரிப்பு பணி காரணமாக விமானம் புறப்படுவது காலதாமதமானது. அப்போது விமானத்தில் போதிய காற்றோட்டம் இல்லை. அவர்களுக்கு குடிக்க தண்ணீரும் தரப்படாததால் விமான பயணிகள் அவதிக்குள்ளாகினர்.

இந்த சமயத்தில் பயணி ஒருவர் விமானத்தின் அவசரகால கதவை திறந்து கொண்டு இறக்கையில் ஒய்யாரமாக நடந்து சென்றார். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. ஆனால் அந்த நபர் சக பயணிகளின் உயிரை காப்பாற்றவே அவ்வாறு நடந்து கொண்டதாக கூறப்படுகிறது. இதுதொடர்பாக சக பயணிகள் 77 பேர் அவருக்கு ஆதரவு தெரிவித்து உள்ளனர். இருப்பினும் விமான பாதுகாப்பு விதிமுறைகளை மீறிய அந்த நபரை விமான நிலைய அதிகாரிகள் பிடித்து காவல்துறையினரிடம் ஒப்படைத்தனர்.

## பாலியல் அவதூறு வழக்கில் ரூ.690 கோடி நஷ்ட ஈடு வழங்க டிரம்புக்கு உத்தரவு : நியூயார்க் நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு

**நியூயார்க் : ஜன. 29,**

**பாலியல் அவதூறு வழக்கில் பாதிக்கப்பட்ட பெண் எழுத்தாளர் ஜீன் கரோலுக்கு ரூ.690 கோடி நஷ்ட ஈடாக வழங்க முன்னாள் அதிபர் டெனால்ட் டிரம்புக்கு நியூயார்க் நகர நீதிமன்றம் அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.**



கடந்த 2016ம் ஆண்டு அமெரிக்க அதிபர் தேர்தலில் டொனால்ட் டிரம்ப் போட்டியிட்ட போது அவர் மீது பல பெண்கள் பாலியல் குற்றச்சாட்டு சுமத்தினர். அதில், பெண் பத்திரிகையாளரும் எழுத்தாளருமான ஜீன் கரோல் கடந்த 1996ம் ஆண்டு மான்ஹட்டன் உயர்தர டிபார்ட்மென்டல் ஸ்டோரின் உடை மாற்றும் அறையில் வைத்து டிரம்ப் தன்னை பலாத்காரம் செய்ததாக குற்றம் சாட்டினார். அதைத் தொடர்ந்து 2022ல் டிரம்ப் மீது பாலியல் துன்புறுத்தல் வழக்கும் கரோல் தொடர்ந்தார். முதலில் விசாரிக்கப்பட்ட இந்த வழக்கில் கரோலுக்கு ரூ.41.5 கோடி இழப்பீடு தர டிரம்புக்கு உத்தரவிடப்பட்டது.

இந்நிலையில், அவதூறு வழக்கை விசாரித்த நியூயார்க் நகர நீதிமன்றம், கரோலின் நற்பெயருக்கு தீங்கு விளைவித்ததற்காக ரூ.152 கோடியும், நஷ்டத்தை ஏற்படுத்தியதற்கு இழப்பீடாக ரூ.538 கோடியும் வழங்க உத்தரவிட்டு வெள்ளிக்கிழமை பரபரப்பு தீர்ப்பளித்தது. இது மாபெரும் சட்ட வெற்றி என 80 வயதாகும் கரோல் கூறி உள்ளார்.

## எலானை பின்னுக்கு தள்ளிய பெர்னார்ட்



**அமெரிக்கா : ஜன. 29,**

**உலகளாவிய ஆடம்பர பொருட்கள் நிறுவனமான LVMH இன் தலைவரும், தலைமை செயல் அதிகாரியுமான பெர்னார்ட் அர்னால்ட் இப்போது உலக பணக்காரர் பட்டியலில் முதலிடத்தில் உள்ளார். எலான் மஸ்க்-யை பின்னுக்குத் தள்ளி உலக பணக்காரர்கள் பட்டியலில் முதலிடத்திற்கு முன்னேறி இருக்கிறார்.**

LVMH இன் தலைமை நிர்வாக அதிகாரி பெர்னார்ட் அர்னால்ட். 74 வயதான இவர், ஃபெண்டி மற்றும் ஹெனசி போன்ற பிராண்டுகளை நிறுவி அதனை பிரபலமடையவும் செய்திருக்கிறார். உலகின் மிகப்பெரிய ஆடம்பரமான பிராண்டாக இது பார்க்கப்படுகிறது.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் உலகின் முதல் பணக்காரராக திகழ்ந்த அர்னால்ட், கடந்த ஏப்ரல் மாதம் துவங்கியதில் இருந்தே, LVMH பங்குகள் பத்து சதவீதம் வரை சரிவடைந்து வருகின்றன. ஒரு கட்டத்தில் அர்னால்ட் சொத்து மதிப்பு ஒரே நாளில் 11 பில்லியன் டாலர்கள் வரை சரிந்தது. அதன் பிறகு உலகின் நம்பர் ஒன் பணக்காரராக எலான் மஸ்க் இருந்து வந்தார்.

இந்நிலையில், அர்னால்ட் மற்றும் அவரது குடும்பத்தின் நிகர மதிப்பு 207.8 பில்லியன் டாலராக உயர்ந்து, உலகின் பணக்காரர் பட்டியலில் முதலிடத்தில் உள்ளார்.

## ஈரானில் பாகிஸ்தானியர்கள் 9 பேர் படுகொலை

**தெஹ்ரான் : ஜன. 29,**

**இந்த விவகாரத்தில் முழு ஒத்துழைப்பை வழங்கும்படி ஈரானிடம் கேட்டிருக்கிறோம் என்று பாகிஸ்தான் தூதர் தெரிவித்து உள்ளார்.**



ஈரானின் சிஸ்டான்-பலூசிஸ்தான் மாகாணத்தில் சரவான் நகரில் ஈரானியர்கள் அல்லாத 9 பேரை அடையாளம் தெரியாத ஆயுதமேந்திய நபர்கள் சுட்டு கொன்றுள்ளனர். இதனை ஈரான் நாட்டின் மெஹ்ர் செய்தி நிறுவனம் தெரிவித்து உள்ளது.

எனினும், எந்தவொரு குழுவும் இதற்கு பொறுப்பேற்கவில்லை. கொல்லப்பட்டவர்கள் அனைவரும் பாகிஸ்தானியர்கள் என பாகிஸ்தான் தூதர் அடையாளம் காட்டியிருக்கிறார். பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு முழு ஆதரவைதூதரகம் வழங்கும். இந்த விவகாரத்தில் முழு ஒத்துழைப்பை வழங்கும்படி ஈரானிடம் கேட்டிருக்கிறோம் என்று அவர் தெரிவித்து உள்ளார்.

9 பாகிஸ்தானியர்களின் கொடூர கொலை ஆழ்ந்த அதிர்ச்சியளிக்கிறது என்று ஈரானுக்கான பாகிஸ்தான் தூதர் முகமது முதசீர் திப்பு எக்ஸ் பதிவை வெளியிட்டு உள்ளார். சமீபத்தில், பாகிஸ்தானை அடிப்படையாக கொண்ட சன்னி பிரிவை சேர்ந்த ஜெய்ஷ் அல்-அடில் என்ற பயங்கரவாத அமைப்பை இலக்காக கொண்டு ஈரான் அரசு, ராக்கெட் மற்றும் ஆளில்லா விமானங்களை கொண்டு தாக்குதல் நடத்தியது.

பாகிஸ்தானின் மேற்கு பகுதியில் பலூசிஸ்தானில் நடந்த இந்த தாக்குதலில் 2 குழந்தைகள் உயிரிழந்தனர். 3 பேர் காயமடைந்தனர் என இஸ்லாமாபாத் அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த சூழலில், ஈரானுக்கு எதிராக பாகிஸ்தான் கடந்த சில நாட்களுக்கு முன் தாக்குதலில் ஈடுபட்டது. சப்பார் பகுதியை நோக்கி இந்த தாக்குதல் நடந்தது. ஈரான் மீது பாகிஸ்தான் நடத்திய அதிரடி தாக்குதலில் 4 குழந்தைகள் உள்பட 7 பேர் பலியானார்கள்.

ஈரானை ஒரு சகோதர நாடு என்று பாகிஸ்தான் கூறி வந்த நிலையில், அந்நாடுகளுக்கு இடையே நடந்த இந்த தாக்குதல் உலக நாடுகள் மத்தியில் ஆச்சரியம் ஏற்படுத்தியது. இந்த சூழலில், ஈரானில் பாகிஸ்தானியர்கள் 9 பேர் கொல்லப்பட்டு உள்ளனர்.

## வீடு வாங்கினால் மனைவி இலவசம்' என அறிவித்த ரியல் எஸ்டேட் நிறுவனம்

**பீஜிங் : ஜன. 29,**

**வீடுகளை வாங்கி உங்களது மனைவிக்கு கொடுங்கள் என்ற தங்களது விளம்பரம் தவறான அர்த்தத்தில் புரிந்துகொள்ளப்பட்டதாக அந்த நிறுவனம் விளக்கம் அளித்துள்ளது.**



இன்றைய நவீன உலகில் பொருட்களை விற்பனை செய்ய நிறுவனங்கள் பல்வேறு உத்திகளை கையாளுகின்றன. அதில் விளம்பரம் முக்கிய பங்கு வகிக்கிறது. அதாவது கவர்ச்சியான விளம்பரங்கள் மூலம் மக்களை ஈர்க்கும் முயற்சியில் நிறுவனங்கள் ஈடுபடுகின்றன.

பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள சீனாவில் ரியல் எஸ்டேட் துறை பெரும் சரிவைச் சந்தித்துள்ளது. இதனால் பல நிறுவனங்கள் விநோதமான விளம்பரங்களை வெளியிட்டு வருகின்றன. அந்தவகையில் சீனாவின் டியான்ஜின் நகரில் உள்ள ஒரு ரியல் எஸ்டேட் நிறுவனமும் தனது வீடுகளை விற்பனை செய்ய வித்தியாசமாக விளம்பரம் செய்துள்ளது. ஆனால் அது மக்களின் கவனத்தை ஈர்த்தது மட்டுமின்றி அரசாங்கத்தின் கவனத்தையும் தன்பக்கம் இழுத்தது.

அது என்னவெனில் வீடு வாங்கினால் மனைவி இலவசம் என்று சமூகவலைதளங்கள் மற்றும் சுவரொட்டிகள் மூலம் அந்த ரியல் எஸ்டேட் நிறுவனம் விளம்பரம் செய்துள்ளது. இதனால் அதிர்ச்சி அடைந்த சமூக ஆர்வலர்கள் அந்த ரியல் எஸ்டேட் நிறுவனம் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரசாங்கத்துக்கு புகார் அளித்தனர். இதனையடுத்து சம்பந்தப்பட்ட ரியல் எஸ்டேட் நிறுவனத்துக்கு சுமார் ரூ.3 லட்சம் அபராதம் விதித்து அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக அந்த நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், வீடுகளை வாங்கி உங்களது மனைவிக்கு கொடுங்கள் என்ற தங்களது விளம்பரம் தவறான அர்த்தத்தில் புரிந்து கொள்ளப்பட்டு இருக்கிறது என கூறப்பட்டுள்ளது.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# இரண்டு ஆண்டுகளில் இரண்டாவது முறையாக முதல்வராக பதவியேற்றார் - நிதிஷ் குமார்

# நீதியை எளிதாக பெறுவது குடிமக்களின் உரிமை - பிரதமர் மோடி பேச்சு





# கொள்ளை அடித்த பணத்தை முதலீடு செய்ய முதல்வர் ஸ்டாலின் வெளிநாடு பயணம்-இபிஎஸ்


சென்னை / புதுக்கோட்டை | 29.01.2024 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்